# துரோபதை மாலையிடு நாடகம்

பதிப்பு
அ. மோகனா

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
ஜூன் - 2008

# துரோபதை மாலையிடு

# நாடகம்

சுவடியியல் மற்றும் பதிப்பியல் நிறைசான்றிதழுக்காக
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்படும் பதிப்பேடு

பதிப்பு
**அ. மோகனா**

நெறியாளர்
**வீ. அரசு**
பேராசிரியர் - தலைவர்

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்லைக்கழகம்**
**சென்னை - 600 005.**
**ஜூன் - 2008**

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

**எண்:**

# நெறியாளர் சான்றிதழ்

**வீ. அரசு**
பேராசிரியர் - தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

**"துரோபதை மாலையிடு நாடகம்"** எனும் தலைப்பிலான ஓலைச்சுடிவயைச் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயப் பேற்றிற்காக **அ. மோகனா** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

**(வீ.அரசு)**

நாள்: - -2008
இடம்: சென்னை-5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**அ. மோகனா**
முதுகலை
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**'சுவடியியலும் பதிப்பியலும்'** என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **"துரோபதை மாலையிடு நாடகம்"** என்னும் பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்

**(அ. மோகனா)**

நாள்: -2008
இடம்: சென்னை-5.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 11 |
| நன்றியுரை | 21 |
| துரோபதை மாலையிடு நாடகம் | 23-123 |
| ***பின்னிணைப்புகள்*** | |
| பாடற் முதற்குறிப்பு அகராதி | 124-130 |
| அருஞ்சொற் பொருள் விளக்கம் | 131 |
| சுட்டி | 132-139 |
| உசாத்துணை நூல்கள் | 140 |

# பதிப்புரை

உலகின் மிகத் தொன்மை வாய்ந்ததாகவும் செம்மொழிகளாகவும் கருதத்தக்கவை கிரேக்கம், லத்தீன் போன்ற மொழிகள். அம்மொழிகளின் தொடக்கக் காலந்தொட்டே "நாடகம்" என்பது உலக வழக்கில் இடம்பெற்றுள்ளது. கிரேக்கத்தில் கி.மு. 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தெஸ்பிஸ் என்பவன் உலகின் முதல் நாடக நடிகனாகக் கருதப்படுகிறான். இத்தகைய வளமைவாய்ந்த மொழிகளோடு ஒப்பிட்டுப் பேசக்கூடிய பெருமை வாய்ந்தது தமிழ்மொழி. தமிழிலும் நாடகம் என்ற சொல்லாட்சி ஆரம்பகாலந்தொட்டே வழங்கிவந்துள்ளது. ஆனால் அது "கதை தழுவிய கூத்து" என்ற பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது.

**தமிழில் நாடகத் தோற்றமும் வளர்ச்சியும்**

தமிழில் 'நாடகம்' என்ற சொல்லாட்சி இருந்ததே தவிர அது கிரேக்கத்தைப் போன்று திட்டமிட்ட வடிவமாக இடம்பெறவில்லை. நமக்கான மரபாகவும் பதிவு செய்யப்படவில்லை. 'கூத்து' என்பதே தமிழுக்குரிய மரபாக இருந்துள்ளது. நாடகம் வடமொழி மரபு. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில்தான் தமிழகத்தில் நாடகம் நுழைந்தது. பகவத்அஜ்ஜுகீயம், மத்தவிலாசப்

பிரகாடனம் போன்ற நாடக நூல்கள் இக்காலத்தில் தோன்றின. சிலப்பதிகாரத்தில் நாடகத்திற்கான கூறுகள் இருந்தாலும் அது நாடகப் பிரதியாகக் கட்டமைக்கப் படவில்லை.

தமிழகத்தில் வழக்கில் இருந்து பின்னர் மறைந்ததாகக் கருதப்படும் நாடக நூல்கள், செயிற்றியம், குணநூல், அகத்தியம், முறுவல், சயந்தநூல், மதிவாண நாடகத்தமிழ் நூல், சுத்தானந்தப் பிரகாசம் போன்றவை.

தமிழகக் கோயில்களில் தமிழ்க் கூத்து, ஆரியக் கூத்து, சாக்கைக் கூத்து, சாந்திக் கூத்து போன்ற கூத்து வகைகள் ஆடப்பட்டதாகக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. கூத்தர், கண்ணுளர், ஆரியர், கோடியர், வயிரியர், விறலியர், நாடக மகளிர், நாடகமடந்தை, நாடகக் கணிகை, பொருநர், பாணர் என்று பல்வேறு பெயர்களால் நிகழ்த்துநர்கள் சுட்டப்பட்டுள்ளனர்.

சுமார் கி.பி. 16, 17, 18ஆம் நூற்றாண்டுகளில் சற்று வித்தியாசமான பிரதிகள் கொண்டுவரப்பட்டன. பள்ளு, குறவஞ்சி, கீர்த்தனை, நொண்டி நாடகம் போன்றவை. இவை பிரபந்த இலக்கியங்களாகக் கருதப்படுபவை. இவையும் ஆடல் பாடல் மரபினையே உள்வாங்கிக் கொண்டுள்ளன. சங்ககாலக் கூத்துக்களின் எச்சங்களாக இவற்றைக் கருதலாம். இவை பிரதி சார்ந்து இயக்கம் பெற்றுள்ளன.

இராம நாடகக் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை போன்றவை பழமையான பிரதிகள். இவற்றில் நாடகத்தின் கூறுகள் காணப்படுகின்றன. இசை நாடக மரபின் முன்னோடிகளாக இவற்றைக் கொள்ளலாம். இதன் தொடர்ச்சியாக ஐரோப்பிய மரபான பார்சி நாடகமரபு தமிழுக்குக் கொண்டு வரப்பட்டது. மேடை பிரமாண்டம் போன்றவை ஐரோப்பியர் வருகையாலே சாத்தியப்பட்ட ஒன்று.

இசை நாடக மரபிற்குச் சங்கரதாஸ் சுவாமிகளும் பார்சி நாடக மரபான வசன நாடகத்திற்குப் பம்மல் சம்பந்த முதலியாரும் அடிக்கோல்களாக விளங்கினர். நாடகத்தில் யதார்த்த மரபினைக் கொண்டுவந்த பெருமை பம்மல் சம்பந்த முதலியாரைச் சாரும். பக்தி இயக்க காலத்தில் நாடக நூல்கள் குறித்த சான்றுகள் குறைவாகக் கிடைக்கின்றன. ஆனால் நிகழ்த்துதல் மரபு இருந்தது.

**இதிகாசங்களும் நாடகங்களும்**

வடமொழியில் புகழ்பெற்று விளங்கிய இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுப் பெரும்புகழ் பெற்றன. இந்தப் பின்புலத்தில் பல நாட்டார் கதைகள் உருவாகலாயின. தமிழகத்தைப் பொறுத்தவரை கலைகள் அனைத்தும் சடங்குகளை முன்னிட்டே நிகழ்த்தப் பெற்றன. சடங்குகள் பண்பாட்டின்

குறியீடுகளாக விளங்குபவை. அவற்றை முழுமையாக உள்வாங்கிக்கொண்டு நிகழ்த்தப்பெற்றவை கூத்துக்கள்.

இத்தகைய நிகழ்வுகளில் இதிகாசக்கதைகள் பெருமளவு தத்தம் தாக்கத்தினை ஏற்படுத்தின. இராமன், கிருஷ்ணன், அனுமன் போன்ற கதாபாத்திரங்கள் கடவுளர்களாக வணங்கப்படுதல் திரௌபதி காளியுடன் மயங்கிய தன்மையில் உருவகப்படுத்தப்படல், சீதை, சீதையம்மனாக வழிபடப் பெறுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே கருப்பொருள் மாற்றம் சமஸ்கிருத மயவாக்கப் பரவலுடன் பாரம்பரிய நாட்டார் கதைகளும், கூத்துக்களும் நாடக வடிவம் பெறலாயின. தமிழ்நாட்டில் மேடையிடப்படும் திரௌபதி நாடகத்துடனான சமய அம்சம் பற்றி ஜானகிராமன் கூறுகையில், “திரௌபதி நாடகம்” ஒரு கிழமைக்கு மேலாகத் தொடர்ந்து நடைபெறும். இந்நாடகத்தின் இறுதியில் பிரதான பாத்திரம் காலையில் ஒப்பனையுடன் திரௌபதி கோயிலை நோக்கிச் சென்று நாடகத்தின் இறுதி அங்கத்தை அங்கே மீண்டும் நடத்துவார். நாடக அளிக்கை நடக்கும் ஏழு, எட்டு நாட்களிலும் நடிகர்கள் மிகக் கடுமையான தன்னடக்கத்தினையும் தூய்மையையும் உடையவராக இருப்பர் என்கிறார்.

கருப்பொருள் மாற்றம் என்பது வெறுமனே இலக்கியம் சம்பந்தப்பட்டதல்ல என்பதனை இது தெளிவாக்குகிறது. இது சமய நம்பிக்கையில் வேரோடியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக மகாபாரத, இராமாயணக் கதைகளுடன் இணைந்த உபகதைகளுடன் மயங்கிய நிலையில் காப்பியக் கதைகள் நடைபெறுவதை நினைவுறுத்திக் கொள்ள வேண்டும்.

மகாபாரதத்தின் வடநாட்டுத் தென்னாட்டுச் சேர்க்கைகள் அறியப்பட்டுள்ள வேறுபாடுகளுக்கும், இங்கு அழுத்தப்படக் கூடியன. எனவே, தென்னிந்திய நாட்டார் நாடக மரபு பண்டைய நாட்களின் நாடக மரபுகளில் ஒரு குறிப்பிட்ட தொடர்ச்சியான மரபினை உடையதாக உள்ளமைக்கான சாத்தியம் உண்டு.

**சில பாரதக் கூத்துக்களின் பட்டியல்**

அல்லி அர்ஜுனன், வத்சலா கல்யாணம், வில்வளைப்பு அல்லது துரோபதை மாலையிடு நாடகம், துரோபதை வஸ்திராபரணம், கம்சதகனம், கர்ண மோக்ஷம் இன்னும் பல. இவற்றுள் கர்ணமோக்ஷம் இறப்பு நிகழ்ந்த வீடுகளில் நடத்தப்பெறுவது குறிப்பிடத்தக்கது.

**துரோபதை மாலையிடு நாடகம்**

திரெளபதி நாடகம் சடங்கு நோக்கங்களுக்காகச் சமயப் பற்றார்வத்துடன் மேடையேற்றப்படுவது என்பதை முன்கூட்டியே பார்த்தோம். நான் பதிப்பிற்காக எடுத்துக்கொண்ட இந்த "துரோபதை மாலையிடு நாடகத்தினை" இயற்றியவர் சின்னய்ய உபாத்தியாயர் ஆவார். அவர்தம் கைப்பட எழுதிய பிரதி என ஓலைச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோடை, சங்கராபரணம், சாவேரி, மத்தியமாவதி, பூரிகல்யாணி, காம்போதி, பருசு, தோடி, ஆனந்தபயிரவி, முகாரி, சவுராஷ்டகம், புன்னாகவாரளி, அசாவேரி, தேசியம், பரிசு, தன்னியாசி, கலியாணி, உசேரி எனப் பதினெட்டு வகையான ராகங்களையும் சம்பை, மிசிரம், ஆதி என்கிற தாள வகைகளையும் ஓரடிச் சிந்து என்ற இசைப் பாவகையையும் கொண்டு ஒரு முழுமையான இசை நாடக வடிவமாக உள்ளது.

வசனம், பொதுவசனம், திபதை, தரு, விருத்தம் என்ற கூத்துக்கான கூறுகளுடன் அமைப்பினைப் பெற்றுள்ளது. மகாபாரதத்தில் நிகழ்கின்ற துரோபதைக்கும் அர்ஜுனனுக்குமான திருமணம் என்கிற ஒரு நிகழ்வினை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

**கதைச் சுருக்கம்**

கௌரவர்கள் சூழ்ச்சியால் பாண்டவர்கள் ஐவரும் அரக்கு மாளிகையில் மாண்டு போனார்கள் என்று எண்ணி பாஞ்சாலராசன் வருந்துகிறான். தன் மகன் துஷ்ட தூய்மனை துரோணரைக் கொல்லவும் மகள் துரோபதையை அர்ஜூனனுக்கு மணம் முடிக்கவும் அவன் சபதம் மேற்கொண்டிருந்தான். அதனை எவ்வாறு முடிப்பது என்று எண்ணியிருக்கையில் வேதப் பிராமணர்கள் பாண்டவர்கள் இறக்கவில்லை என்று கணித்து சொல்கின்றனர். பின்னர் பாஞ்சாலராசனின் அவைக்கு விசயம் செய்த வியாசர் துரோபதைக்குச் சுயம்வர ஏற்பாடு செய்யச் சொல்கிறார்.

இமயத்திலிருக்கும் எகுவில் மற்றும் மச்சயெந்திரத்தின் பெருமையினைக் கூறி அதனை அர்ச்சுனனால் மட்டுமே வளைக்க முடியும் என்றும் கூறிச் செல்கிறார். அவர் சொற்படி அனைத்து தேசங்களுக்கும் சுயம்வர ஓலை அனுப்பப்படுகிறது. அரக்கு மாளிகைக்குத்தப்பி அந்தணர் வேஷங் கொண்டிருக்கும் பாண்டவர்களும் இதனை அறிந்து சுயம்வர மண்டபத்திற்குச் செல்கின்றனர்.

அரசர்கள் யாராலும் வில்லை வளைக்க முடியாமற் போகவே அந்தண வேடங்கொண்ட அர்ச்சுனன் வில்லை வளைத்து துரோபதையை மணக்கிறான். எதிர்த்துவந்த

மன்னர்களையும் வெற்றி கொள்கிறான் என்பதோடு இந்நாடகக் கதை முடிவுறுகிறது.

**சிற சிறப்புச் செய்திகள்**

இந்நாடகத்தில் பிராணமர்கள் பற்றி வருகிற தரு சற்று நகைச்சுவையோடு இருந்தாலும் அவர்கள் பணமே பிரதானமாகக் கொண்டிருந்தனர் என்பதனை உணர்த்துகின்றது.

"பச்சரிசிக்கும் பருப்புக்கும் நெய்யிக்கும்
பதிங்காத மானாலும் ஓடுவோம்
பணமென்றால் பூணூல் திருத்திக் குடுமி கட்டிப்
பிராமணபரியந்தம் போராடுவோம் சொந்த
மச்சினனாலும் கூடவரவொட்டோம்
வந்தாலுமவனுக்கு வாங்கிக் கொடுக்கமாட்டோம்"

சொல்லடுக்கும் உவமை அழகும் ஓசை நயமும் அமைந்து காணப்படுகிறது. ராசாக்கள் வருகிற தருக்களை வீரச்சுவையோடு அமைத்து ஓசையினை மிடுக்காக அமைத்தும் துரோபதை வருகிற தருவினை நளினத்தோடு புலவர்களுக்கே உரித்தான கேசாதிபாத வருணனையுடன் அமைத்துள்ளார். சோழனை சூரிய குலத்தோன் என்றும் பாண்டியனை சந்திர குலத்தோன் என்றும் கூறியுள்ளார்.

"சந்திரகுலத்தில் வருந்துங்கன் - புவியில்நாளுந்
தமிழைவளர்க்கும் நற்பிரசங்கன்

இந்திரன் துதிக்கும் களங்கன் அகஸ்தியருக்கு
இஷ்டமாகிய சதுரங்கன்"

"துதிபெறுமதிமுக ரதிபனி நவரச
நிதிதுரோபதை வந்தாள்
சதிர்பெறுமிளமதி நுதலதுவயங்க
கதிர்முடியெதிர் கழல்அரசர்கள் மயங்க"

இவ்வாறு பல சுவையான பாடல்களை இடையிடையே கொண்டு விளங்குகின்றது.

### சுவடி அமைப்பு

100 ஏடுகளைக் கொண்டும் சற்று சிதிலமடைந்ததாகவும் இச்சுவடி காணப்படுகிறது. 13x1 என்கிற அளிவினை உடையதாய் பக்கத்திற்கு நான்கு வரிகள் என இருபக்கமும் எழுதப்பட்ட சுவடியாக உள்ளது. 1951-52ல் ஸ்ரீ கே. சண்முகம் என்பவரால் இச்சுவடி கீழ்த்திசை சுவடி நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டு உள்ளது.

### யாப்பு

இந்நாடகத்தில் அறுசீர், எண்சீர் ஆசிரிய விருத்தங்கள் பயின்று வந்துள்ளன. வஞ்சித்துறை சிலவற்றை விருத்தம் என்று வழங்கியுள்ளனர். நெடில் விருத்தம் ஒன்றும் உள்ளது. துரோபதையின் கூற்றாக ஒரே ஒரு கொச்சகமும் அமைந்துள்ளது.

**பேச்சு வழக்கு**

நாடகங்களின் நாட்டார் வழக்காறுகள் இடம்பெறுதல் இயல்பு. அந்த வகையில் சிலவு, தேவடியாள், சாமி, பெலம், வலுமை போன்ற சில சொற்கள் இந்நாடகத்தில் பயின்று வந்துள்ளன.

மகாபாரதத்தின் ஓர் காட்சியை கருவாகக் கொண்ட இந்நாடகம் படித்து மகிழ்ந்து பயன்பெறத்தக்கதொன்றாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

# நன்றியுரை

"சுவடியியலும் பதிப்பியலும்" என்கிற பட்டயப் படிப்பில் சேர்வதற்கு வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறைக்கு முதற்கண் எனது நன்றியினை உரித்தாக்குகிறேன்.

இப்பட்டயப் படிப்பில் செம்மையான முறையில் பயிற்சி அளித்த பேராசிரியர் வீ. அரசு மற்றும் விரிவுரையாளர் ய. மணிகண்டன் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெறியாளர் என்கிற முறையில் இத்தலைப்பினைத் தேர்ந்தெடுத்து பதிப்பிற்கு ஊக்கப்படுத்திய பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கு மிக்க நன்றி.

இப்பதிப்பு செம்மையான முறையில் வெளிவர உதவிய என் குடும்பத்தார்க்கும், ஒவ்வொரு கட்டத்திலும் உறுதுணையாக இருந்து உற்சாகப்படுத்திய மு. கஸ்தூரி, ம. சுதா அவர்களுக்கும் என் அன்பார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. மோகனா

# துரோபதை மாலையிடு நாடகம்

### ஹரி ஓம் நன்றாக

### வெண்பா

### சங்கரா பரணம்

“வெற்றி பெறுவிசையன் வில்வளைத்து மாலையிட்ட
நற்றுதி சேர்கலியாண நாடகத்....
சந்தத முஞ்சொல்ல சித்தி விநாயகனார்
கந்த மலர்ப்பதங்கள் காப்பு” 1

*(யும் திருவும் தோன்றுதற்காம் நெஞ்சமே நல்ல தரும்)*

### சித்தி ஐங்கரனை நாடு விருத்தம்

### சாவேரி ராகம்

“பற்பலர் புகழும் பஞ்சபாண்டவர் தழைக்க வந்த
கற்பினி லுயர் பாஞ்சாலி கலியாண நாடகத்தை
அற்புத மாகயிந்த அவனியிற் பாடு தற்கு
விற்பனர் நல்லசித் திரவிநா யகர்காப்பு தாமே” 2

“உள்ளுமாய்ப் புறம்பாய் சித்தா
யொன்றுமாய் பல(வாய்) வித்தாய்
எள்ளினு ளெண்ணைய் போல
எங்கும் பூரணமாய் நின்ற

தெள்ளுமெய்ப் பொருளை யாதி
சிவன் செவிக்குப தேசித்த
வள்ளிதெய் வானைப் பாகன்
மலர்ப்பதம் போற்றி போற்றி" 3

"ஆதிமால் பாதம் போற்றி
அரனிரு சரணம் போற்றி
வேதன் சேவடிகள் போற்றி
விண்ணவர் கழல்கள் போற்றி
மாது செந்திருவைப் போற்றி
மரகதத் தாயைப் போற்றி
தாது வெண் கமலமேவு
சரஸ்வதி தாளைப் போற்றி" 4

**தோடை ராகம் நாட்டை**

**தாளம் சம்பை**

செயமிகுந்த வில்விசையன் சிலைவளைத்து மாலையிட்ட
நயமிகுந்த... மிஞ்சிய நிருபரைவருக்கு மரிவைதுரோபதைக்கும்
மங்களம் செய மங்களம் சுப மங்களம். 5

**பிள்ளையார் வருகிற தரு**

தொந்திக் கணபதி வந்தார் - வெகுதுதிபெறுசிவபத
தொந்திக் கணபதி வந்தார்
தந்தித் திருமுக மணிமிடல் - சந்திரப்பிறையான் வொரு
கொம்பதுதள தளவென்று வொளிகவும் மெல்ல
வருகுமுளம் தங்கி யருள்புரி நல்லசித்தி (தொந்திக்)

தகிட கிடதக்கின செமகிடதக தணுததீம் கிட
தகதீம் திமி தகத்திமி திமிதகணுத கெணுதகெணு
தகதாகிட தரிதக்கிட திரிதிக்கிட தானாதரிக்க
திங்கண தோமென (தொந்திக்)

அங்கு சபாசமும் கையிலெடுத்து - உல்லாசமாக
அரையில் பீதாம்பரத் தையுடுத்து மின்னலைப்போலும்
பொங்கமாய் மார்பிற் பூணநூல் தொடுத்து - அடியவர்கள்
போற்றிக் கேழ்க்கும் வரங்கள் கொடுத்து - ஆனந்தமாக
துங்கமிகும் பலாவின் சுளையும் பலமென் கனியும்
பயறும் பொறியுமதில் வுண்டைகளும் சுவை
கொண்ட கரும்பு கிழங்குகளும் - பல
வண்டல்களும் வடைதோசையவல் கடலை
ஆசையுடனுகர் தொப்பையசைத்து நிலத்தினில்
மெத்தென மெத்தென கித்தடி
வைத்து நடித்து துகளில்!
செங்கமல நிகர்பதங்கள் மிசைசிறு - சதங்கையொலி
கலகலவென்றிடவுஞ்
சுபகாமுடனிறை சபையினில் ....த்தை சொலவே
பயமிகுந்த மேருவினில் பாரதமெல்லா மெழுதும்
வயமிகுந்த நல்லசித்தி விநாயகனையே

பொங்கமிகு பாண்டவர்கள் பூமிபுகழ் பாஞ்சாலை
நங்கையைக் கலியாணம் செய்தநாடகத்தை சொல்லவே ஆ
துங்கமிகு மயிலேறி தொல்லுலகை வலம்வந்த
செங்கைவடி வேல்முருகர் திருவடிகள் துணையே.

கன்னியர்க் கெல்லாமுயர்ந்த கன்னியெனும் துரோபதையை
நன்னயமாய் மாலையிட்ட நாடகத்தைச் சொலவே
தன்னிகரில் லாதமகா சதாசிவனும்
மன்னியவில் வுலகளந்த மாயவனும் துணையே.

இலகுபுகழ் பஞ்சவர்கள் யேந்திழை துரோபதியை
நலமுடனே மாலையிட்ட நாடகத்தைச் சொலவே
மலைவுதரு விக்கினங்கள் வராமலெப் பொழுதும்
மலர்மகளும் கலைமகளும் மாதுமையும் துணையே.

மங்களம் செயமங்களம் சுபமங்களம்
சந்திரவம்ச பாண்டவர்க்கும் மங்களம் - நல்ல
மங்கை துரோபதைக்கும் மங்களம்
சத்திய மொருக்காலுந் தப்பாம லுலகத்தை யாளுவோர்;
எதிர் சண்டையிட்டோர் புறங்கண்டு வெற்றிகொண்டு மீளுவோர்
நித்திய வலிமையை யெப்போதும் மறவாமல்
நெஞ்சில் நினைத்தென்றும் அஞ்சலி செய்திந்த
நிலமும் பலதலமும் புகழிலகும்படி வதிசெய
தொந்திக் கணபதி வந்தார் - வெகுதுதிபெறுசிவபத
தொந்திக் கணபதி வந்தார்.

## பாடகர் சொல் - பொதுவசனம்

*அகோ தெப்படியென்றால் ராசாதிராசனான துரியோதன மகாராசன் தான் கபட வஞ்சகமாய் செய்த அரக்கு மாளிகையில் பாண்டவர்கள் ஐந்துபேரும் மடிந்தார்கள். (இ)யினிமேல் நமக்கெதிரியில்லையென்று*

மகாசந்தோஷத்துடனே அஸ்தினாபுரத்திலிருந்து ராச்சிய பரிபாலனம் செய்து கொண்டிருக்கும்போது பாண்டவர்கள் பகாசூரனை வதைசெய்து போட்டு வேத்திரகீயத்திலிருக்க, பாஞ்சாலராசா தம்மிடகுமாரத்தி துரோபதையை அர்ச்சுனனுக்குப் பாணிக்கிரகணம் செய்துகொடுக்கயிருந்தோமே அவர்களைந்துபேரும் அரக்குமாளிகையிலே வெந்து போய்விட்டதாய் சொல்லிக் கொள்ளுகிறார்களே யினி என்ன செய்வோமென்று அது நன்றாய் விசாரிக்கும்படியாய் பாஞ்சாலராசா கொலுவுக்கு வருகிற விதாங்காண்க.

**பாஞ்சால ராசா வருகிற தரு**

ராகம் - மத்தியமாவதி

பாஞ்சாலராசன் வந்தான் - கொலுவிருக்கப்
பாஞ்சாலராசன் வந்தான்

பாஞ்சால தேசமெல்லாம் வாஞ்சையுடனே ஆள்வோன்
பற்பலர்களு வெகு அற்புத மிதுவென
பொற்பொடு துதிசெய விற்பன குணநிதி (பாஞ்சால)

நவரத்தின கிரீடமிலங்க - யிருபுசத்தில்
நலமாய்புச கீர்த்திதுலங்க - அகண்டமார்பில்
நவமாய் மணிவடங்கள் நாகரிகமாய்ப் பூண்டு
நங்கைய ரிருபுறம் யிங்கிதமுடன் மலர்

செங்கையில் கவுரி அலங்கிருதமுடன் வீச (பாஞ்சால)

செகபூச்சகாக் குடைபிடிக்க - கடிகையர்கள்
எதிரெதிரெச்சரிக்கை படிக்க - உன்னதமான
பாகுமொழி மாதர்கள் பாதமுறை நடிக்க
பம்பை தவில்கிடுகு கொம்பு மணிமுரசு
உம்பருல களவும் சம்பிரமுட னெதிர் (பாஞ்சால)

மந்திரிமார்கள் புடைசூழ - யிருபாதத்தில்
வந்துசத்துர ரெல்லாம்வீழ - மைந்தனும்தானும்
இந்திரன் வெகுவெகு சுந்தரமாய் நடந்து
எண்டிசை தனிலிசை கொண்ட மணிமகுட
மண்டலிகர் யெதிர் தொண்டனிடவே யிதோ (6)
(பாஞ்சாலராசன் வந்தான்)

## ராசா போற்றிக் கவி

வேதமோர்நாலும் வாழ்க! வேதியர்மாழ வாழ்க!
பூதலமன்னர் வாழ்க! புகழ்மனுநீதி வாழ்க!
மேதினியோர்கள் வாழ்க! விளங்கும் செங்கோலும் வாழ்க!
தீதிலாஆதிமூர்த்தி செங்கண்மால் பாதம் போற்றி! (7)

## ஆலாத்திப் பெண்கள் சொல்கிற எச்சரிக்கை

தேசனே புகழ்வாசனே நல்லுலாசனே எச்சரிக்கை!
நேசனே பாஞ்சாலனா மகாராசனே எச்சரிக்கை!
துங்கனே சொற்பிரசங்கனே அகளங்கனே எச்சரிக்கை!
செங்கை வேலுளதுருபதேய சிலாக்கியனே எச்சரிக்கை!

சீலனே பரிபாலனே குணலோலனே எச்சரிக்கை!
வேலை சூழ்புவிபுகழும் பாஞ்சாலனே எச்சரிக்கை!
தீரனே யதிசூரனே நவமாரனே எச்சரிக்கை!
பாரெலாம் துதிசெயும் பாஞ்சாலபார்த்திபா எச்சரிக்கை!

விருதுவிக்கிரம நிருபனே விகிதனே எச்சரிக்கை!
துருபதேயநான் நாடளித்திடும் தோன்றலே எச்சரிக்கை!
மன்னனே நல்விற்பன்னனே செயத்தன்னியனே எச்சரிக்கை!
பன்னும் பாஞ்சால நாட்டையாளும் பார்த்திபா எச்சரிக்கை!

மெத்த வீரமிகுத்த மார்பில் ரத்தினமே எச்சரிக்கை!
எத்திசையும் புகழ்பாஞ்சால யிறைவனே எச்சரிக்கை!
மகுடமன்னர்கள் வானுளோர்களும் வாழ்த்துவோம் எச்சரிக்கை!
செகம்புகழ்ந்திடு மகிப்பாஞ்சால தீரனே எச்சரிக்கை! (8)

**ராசா மந்திரிக்குச் சொல்கிற திபதை**

"மந்திரி களாயெந்தன் மனத்தினில் நினைத்துவந்த
சந்தேக மெல்லாமிந்த சபையினிலறிய வேணும்
விந்தை சேர்திடத்தில் நல்லவிற்பன நிபுணரான
அந்தணர் தமையிப்போது அவையினில் வரச்செய்வாயே!"

9

**வசனம்**

*அகோ கேளும் மந்திரி மனதிலே சிறிது சந்தேகமிருக்கிறது. அது அறியவேணும். நம்மிட ஆஸ்தான சாஸ்திரிகளை அழைப்பியும் பிள்ளாய்!*

*மந்திரி வசனம் : அப்படியே அழைப்பிக்கிறேன் சாமி.*

*மந்திரி சேர்வைக்காரருக்குச் சொல்கிற திபதை*

**ஆரடா சேர்வைக்காரா! அதிவேகமாகச் சென்று**
**பாரியையாள் பாஞ்சால பாத்திபனழைத்தா னென்று**
**சாரமாய் சொல்லும்சோதி சாந்தீர நிபுணரான**
**ஆரியர் தம்மையிப்போ அழைத்துக் கொண்டோடிவாடா!**

(10)

**வசனம்**

*ஆரடா சேர்வைக்காரா சீக்கிரமாய்ப்போய் நம்மிட சாஸ்திரிகளை அழைத்துக்கொண்டு வாடா.*

*அப்படியே அழைத்துக்கொண்டு வருகிறேன் ஐயா சாமி!*

**சேர்வைக்காரன் பிராமணர்களுக்குச் சொல்லுகிற விருத்தம்**

**துய்யரே! சரணம்! சோதிடம் தெரிந்த**
**மெய்யரே! சரணம்! வேதநூல் முழுதும்**
**கையிலே நெல்லிக் கனியென வறிந்த**
**ஐயரே உம்மை அரசர் அழைத்தார்!** (11)

**வசனம்**

*சரணம்! சரணம்! ஐயா சாஸ்திரிகளே உங்களைப் பாஞ்சால ராசா அழைத்துக்கொண்டு வரச் சொன்னாரையா சுவாமி!*

*நல்லது அப்படியே போவோம் வாரும் பிள்ளாய்!*

## சேர்வைக்காரன் பிராமணாள் வருகிற விருத்தம்

"திருமணி விபூதி யிட்டு சிரிசிற் குல்லாயும் போட்டு
மருவிநிற் காவி சோமன் வரிசையாய்க் கட்டிக் கொண்டு
பரிவுடன் சாஸ்தி ரங்கள் பஞ்சாங் கம்கையி லேந்தி
கருதுபிரா மணர்கள் வந்து களரியிற் றோன்றி னாரே" (12)

*தரு. பிராமணர்கள் சொல்லுகிறது*

*ராகம்: சவுராஷ்டகம்; தாளம்: மீசிரம்*

வேதப்பிராணமர் நாங்களே - சாஸ்திர
விகிதப்பிராமணர் நாங்களே
நீதி சேரிந்தவ் வுலகத்திலுள் ளோர்கள்
நினைத்த விதமிதென்று க்ஷணத்திலறிந்து சொல்லும்
(வேதப் பிராமணர்)

ஆருமறியா அலைகடலாழ மகலம்நீளம்
கண்டுசொல்லுவோம் - மேலும்
ஆத்துமணல் நட்சத்திரமும் யிவ்வளவென்று
அதுக்கும் தொகையைச் சொல்லிடுவோம் - யிந்த
ஈரேழு பதினாலு லோகத்துக் கப்பாலு
மிருக்கும் விதத்தைக் கண்டு உரைப்போம் சமத்தைக்கொண்டு
(வேதப்)

காணா பொருளெல்லாங் காணும்படி - உள்ளங்
கையில் நெல்லிக்கனிபோல் காட்டுவோம் - நாங்கள்

கற்ற மந்திரத்தாலே மும்மூர்த்திகளைக் கூட
கையிற் கயிற்றைக் கட்டி ஆட்டுவோம்
கோணாம லெல்லோற்கும் குருக்களாய்த் திலபட்டோம்
குறைபேர் எங்களைக் கண்டால் கும்பிடவிட்டோம்
(வேதப்)

பச்சரிசிக்கும் பருப்புக்கும் நெய்யிக்கும்
பதிங்காத மானாலும் ஓடுவோம் - காசு
பணமென்றால் பூணூல்திருத்திக் குடுமிகட்டிப்
பிராமணபரியந்தம் போராடுவோம் சொந்த
மச்சினனானாலும் கூடவர வொட்டோம்
வந்தாலுமவனுக்கு வாங்கிக்கொடுக்க மாட்டோம் (13)
(வேதப்பிராமணா்)

**சேர்வைக்காரன் ராசாவுடனே சொல்லுகிற வசனம்**

*ராசராச பரமேசுவர ராச மார்த்தாண்ட ராச உத்தண்ட சாமி பராக்கு; சாஸ்திரிகளை அழைத்துக் கொண்டு வந்தேனையா சுவாமி.*

*பிராமணாளுக்கு ராசா போற்றிக் கவி*

மேதினியெல்லாம் போற்றும் வேதவேதியரே போற்றி!
வேதசாஸ்திர புராணம்விளம்பும் அந்தணரே போற்றி!
நீதியும்நெறியும் நல்லநேரமும் அறிந்த எங்கள்
மாதவத்தோரே உங்கள் மலர்ப்பதம் போற்றி! போற்றி!
(14)

**வசனம்**

*சரணம்! சரணம்! வாருங்கோள்! சாமி, சாமி. சாஸ்திரிகளே!*

**பிராமணாள் ஆசிர்வாதம் திபதை**

சீரெல்லாம் படைத்தகோவே சிரஞ்சீவி ஆசிர்வாதம்!
பாரெல்லாம் புகழ்பாஞ்சால பார்த்திபனென்ன வந்த
பேரினுலயர்ந்த எங்கள் பெருமானே ஆசிர்வாதம்!
மாரனே! உனக்கு நித்தியமங்களம் ஆசிர்வாதம் (15)

**வசனம்**

*சிரஞ்சீவி! சிரஞ்சீவி சுகீபவா! ஆசிர்வாதமய்யா பாஞ்சால மகாராசனே!*

**சாஸ்திரிகள் சொல்லுகின்ற திபதை**

பங்கமும்பழுதும் வேறோர் பயமுமில்லா மலிந்த
துங்கபாஞ்சால நாட்டை சுகமுடனளித்துக் காக்கும்
மங்களமிகு பாஞ்சால மன்னனே! சபையிலிப்போ
எங்களை யழைத்த செய்தியியம்பு வீரியம்புவிரே! (16)

**வசனம்**

*வேறொரு தாழ்வுமில்லாமல் பாஞ்சால தேசத்தை யாளப்பட்ட மகாராசனே! சபையிலே எங்களை அழைத்த காரியங்களைச் சொல்லுமையா!*

### ராசா சொல்லுகிற திபதை

"சூரத் துரோணனையே கொல்ல துஷ்டதூய்மனை யளித்தேன்
மாரன் அர்ச்சுனனுக்காக மாது துரோபதையைப் பெற்றேன்
வீரத் துரோணனை நானெந்த விதத்திலுங் கொல்வேன்
பாரிலென் மருமகனான பார்த்தனனை யெங்கே காண்பேன்"

(17)

### வசனம்

அகோ கேளுங்கள் சாஸ்திரிகளே! துரோணாச்சாரியைக் கொல்லுகிறதற்காகத் துஷ்டதூய்மனான ஒரு பிள்ளையைப் பெற்றேன். அர்ச்சுனனுக்குக் கலியாணம் பண்ணிக் கொடுக்க துரோபதியான ஒரு பெண்ணைப் பெற்றேன். நான் சபதம் பண்ணின யிரண்டு காரியத்திலே துரோணனை எப்படியும் கொல்வேன். என் மகளுக்கு நேமகம் பண்ணியிருந்த அர்ச்சுனனை இனிமேல் எங்கே காணப்போகிறேன் சாஸ்திரிகளே!

### ராசாவுக்கு சாஸ்திரிகள் சொல்லுகிற திபதை

"மனிதனில் யினிவேறொன்றும் வருத்தம்நீ எண்ணவேண்டாம்
நினைந்திடும் சபதமிரண்டும் நிறைவேறும் பழுதில்லாமல்
கனந்தர நீதான்பெற்ற கன்னிகைக்காய் நேமித்த
தனஞ்செயனுக்கு வந்ததாழ்வென்ன சொல்வாய் மன்னா"

(18)

**வசனம்**

*அகோ! கேளும் மகாராசனே! நீர் நினைத்த சபதமிரண்டும் எப்படியும் நிறைவேறும். ஆனாலும் உம்(மிட)முடைய குமாரத்தியான துரோபதைக்கு நேமித்த அர்ச்சுனனுக்கு வந்த தாழ்வென்ன சொல்லுமையா!*

**ராசா சொல்கிற திபதை**

கபடவஞ் சகமாய்பாவி கடுந்துரியோதனன் தான்
அவமதியாலே செய்த அரக்கு மாளிகையிலந்த
பவமிலாதர்மர் சிந்தை பாண்டவர் ஐந்துபேரும்
தவனுற மாண்டாரென்ற சமாசாரம் கேட்டிலிரோ! (19)

**வசனம்**

*அகோ கேளுங்கள் சாஸ்திரிகளே மகாபாவியான துரியோதனன் கபட வஞ்சகமாய் செய்த அரக்கு மாளிகையிலே பாண்டவர்கள் ஐந்து பேரும் இறந்து போனார்களென்ற சமாசாரம் நீங்கள் இதுவரைக்கும் கேழ்க்கவில்லையோ சாஸ்திரிகளே!*

**சாஸ்திரிகள் சொல்லுகிற திபதை**

அரக்குமாளிகை வெந்தாலும் அஸ்தினாபுரி வெந்தாலும்
நெறுக்கு மீரேழுலோகம் நீறுநீறாய் வெந்தாலும்
இரக்கமும் அன்பும்நல்ல இணக்கமும் வணக்கமுள்ள
உருக்கமாம் பாண்டவர்க்கு ஒரு தீங்கும் வாராதையா! (20)

**வசனம்**

*அரக்கு மாளிகையில் வெந்து போனாலும் அஸ்தினாபுரம் வெந்து போனாலும் யிந்த யீரேழு பதினாறு லோகங்களும் நீறு நீறாய் வெந்து போனாலும் பாண்டவர்களுக்கு ஒரு தீங்கும் வாராதையா! பாஞ்சால மகாராசனே!*

**சாஸ்திரிகளுக்கு ராசா சொல்லுகிற திபதை**

அரக்கு மாளிகைக்குத் தப்பிஜவரும் அவனிமீதில்
இருக்கிறா ரென்றசெய்தி யெவர்களும் சொல்லக்காணோம்
தரைக்குள்ளே யெங்கானாலும் சஞ்சரித் திருப்பாரானால்
திருக்கற அவர்கள்சேதி தெரியாம லிருப்பதுண்டோ? (21)

**வசனம்**

*அரக்கு மாளிகைக்குத் தப்பி பஞ்சபாண்டவர்கள் உலகத்திலே எங்கேயானாலும் இருந்தார்களானால் அப்போது அவர்களிருக்கிற சாடை எவ்வளவானாலும் தெரியாமலிருக்குமோ சாஸ்திரிகளே!*

**சாஸ்திரி ராசாவுக்கு சொல்லுகிற திபதை**

தஞ்சமென்ற வரைக்காக்கும் தயாளபாஞ்சால மன்னா
நெஞ்சினில் விதனம்ஒன்று நினைத்திடவேண்டாம் கண்டாய்
நஞ்சினும் கொடியபாவி நயமில்லாத்துரியோத னனின்னம்
வஞ்சகம் செய்வானென்று மறைந்திருப்பார் களையா (22)

**வசனம்**

*கேளும் பாஞ்சால மகாராசனே! பாண்டவர்களுக்காக நீர் விசனப்படத் தேவையில்லை. மகாபாவியான துரியோதனன் கண்டால் இனிமேலும் கபட மார்க்கத்தினாலே கொல்லப்போகிறானென்று எங்கேயாகிலும் மறைந்திருப்பார்களையா!*

**ராசா சொல்லுகிற திபதை**

ஐவரும் உயிரோடின்னம் அவனியி லிருக்கின்றாரோ?
மைவரும் சூதரக்கு மாளிகைதனில் வெந்தாரோ!
கைவரும் நெல்லிக் கனியெனத் தேர்ந்துபார்த்து
மெய்வரும் சாஸ்திரத்தை விளக்கமாய் சொல்லுவீரே!

(23)

**வசனம்**

*பாண்டவர்களைந்துபேரும் உயிருடனேயிருக்கிறார் களோ அல்லாமல் அரக்கு மாளிகையில் இறந்து போனார்களோ; யித்தை உங்கள் சோதிட சாஸ்திரத்தைப் பார்த்துச் சொல்ல வேணுமையா சாஸ்திரிகளே!*

**சாஸ்திரிகள் சொல்லுகிற திபதை**

அண்ணலே எம்மைக்கேட்ட ஆரூடபலனைப் பார்த்தால்
வண்ணமாய் செயுமரக்கு மாளிகையி லிறந்ததில்லை

புண்ணிய பலனால்தப்பிப் புவிதனி லிருக்கின்றார்கள்
திண்ணமாம் பாண்டவற்குச் சிலுகொன்று மில்லையையா!(24)

**வசனம்**

*நீரெங்களைக் கேட்ட ஆரூடத்தைப் பார்த்தால் பாண்டவர்கள் அரக்கு மாளிகையிலிறந்து போகவில்லை. பூமியிலே உயிருடனிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சிலுகுமில்லை மகாராசனே!*

**இதுவுமது**

எட்சணி யல்லியாந்தை எழில்நரிநாகம் தும்பல்
நிச்சயம் ராமச்சக்கரம் நிமித்தம்நற் கயறுசாத்தல்
நட்சத்திரம் ராசிவாரம் நாழிகை நாடிபஞ்ச
பட்சிசாஸ்திர முமந்த படிதானே சொல்லுதையா! (25)

**வசனம்**

*எட்சணி, பல்லி, ஆந்தை, நரி, காக்காய், தும்பல், ராமசக்கரம், நிமித்தம், கயிறு, காத்தல், நட்சத்திர ராசிபலன், வாரபலன், நாழிகைப்பலன், நாடிப்பலன், பஞ்சபட்சி சாஸ்திரம் யிதுமுதலான சாஸ்திரங்களெல்லாம் பாண்டவர்கள் உயிருடனிருக்கிறார்களென்றே சொல்லுதையா பாஞ்சால ராசனே!*

**ராசா சொல்லுகிற திபதை**

ஐயரே கேளீருங்கள் ஆசிர்வாதத் தினாலும்
தையலென் மகள்பாஞ்சாலி தன்தவப் பலத்தினாலும்
உய்யும் பாண்டவர்கள் தப்பிஉயிருட னிருந்தாரானால்
செய்யுமென் சபதமெல்லாம் திருக்கறநடக்கும் தானே

(26)

**வசனம்**

*ஐயா உங்கள் ஆசிர்வாதத்தினாலேயும் என் மகளான துரோபதை செய்த தவப் பலத்தினாலேயும் பாண்டவர்கள் மாத்திரம் உயிருடனே தப்பியிருப்பார்கள். ஆனால் நான் செய்த சபதம் நிறைவேறும் சாஸ்திரிகளே!*

**சாஸ்திரிகள் சொல்லுகிற திபதை**

சபதமு முடியுமுந்தன் தனையளாந் துரோபதைக்கு
விபவமும் நடக்கும் யித்தைமேலினி யறியப்போறீர்
சுபகரமிது பாஞ்சால சூரனே எங்களுக்கு
செபசந்தி வேளையாச்சு சிலவுதந் தனுப்புவீரே (27)

**வசனம்**

*உம்முட சபதம் முதல் நிறைவேறும் துரோபதைக்கு நல்ல சிறப்பு நடக்கும். எங்களுக்கு சிலவு கொடுத்து அனுப்ப வேண்டும் பாஞ்சால மகாராசனே!*

**ராசா வசனம்**

*அப்படியே போய்வாருங்கோள் சுவாமி.*

**சாஸ்திரிகள் போனபிறகு பாடகர் சொல்லுகிற பொது விருத்தம்**

களங்கமில் லாம லங்கே கருதுபிரா மணர்கள் மன்னன்
உளங்களி கடர மெல்லா முரைத்தவர் போன பின்பு
வளங்கெழு தருமம் வளர்க்கும் பாஞ்சால மன்னன்
விளங்கிய சபையில் வேத வியாசரும் தோன்றி னாரே (28)

**வேதவியாசர் வருகிற தரு**

*ராகம்: பூரிகல்யாணி. தாளம் : ஆதி*

தவிமுனிவேத வியாசர் வந்தார் - சதுர்மறையருளி
தவமுனிவேத வியாசர் வந்தார்

அவனியில் வெகுகீர்த்தி படைத்த
அரசனாம் பாஞ்சாலன் சபையில்
தவமுனிவேத வியாசர் வந்தார்.

திருத்தமாகச் சடைமுடிதரித்து நீறணிபுயத்தில்
செவ்வையாய் காஷாயத்தைவிரித்து
கருத்தினில் செபமாலைக்கிசைந்த
கருதுமூல மந்திரமுச்சரித்து (தவமுனி)

நேமமாய்த் தெண்டுகமண்டலம்
பிடித்து மெய்பொருளிதுவென
நேர்மையான சுருதிகள்
படித்து பூமியின்பதினெண்புராண
பொருளின்பயனைப் புகன்றுநடித்து (தவமுனி)

எவரும்கண்டு துதித்துப் போற்றவே பாஞ்சாலன்
மனதிலிருக்கும் கவலையனைத்து மாற்றவே
தவறில்லாத கன்னிதுரோபதை தையல் வதனத்தழலை
யாற்றவே! (தவமுனி வேதவியாசர்)

## ராசா எதிர்கொண்டு பணிந்து சொல்லுகிற திபதை

நாதனே போற்றி! நல்லஞால மாதவனே போற்றி!
நீதனே போற்றி! துன்பம்நீக்கும் உத்தமனே போற்றி!
போதனே போற்றி! தத்துவப்பொரு ளறிந்தவனே போற்றி!
வேதனே போற்றி! வேதவியாசனே போற்றி! போற்றி! (30)

## வியாசர் ராசாவை வாழ்த்துகிற திபதை

தருமமும் தவமும்நல்ல தயாளமுள்ளவனே வாழி!
அருமையும் அன்பும்யீகை யருளுமுள்ளவனே வாழி!
வருமனு நீதிசெய்கோல் வளமையுள்ளவனே வாழி!
திருவெலாம் பெருபாஞ்சால தீரனேவாழி! வாழி! (31)

**வியாசரும் ராசாவும் கொலுவிலிருந்து வியாசருக்கு ராசா சொல்லுகிற திபதை**

குவிந்த என்தவமோ! எந்தன் குலம்செய்த தவமோ! அல்லாமல்
நவின்ற என்மகள் பாஞ்சாலி நந்தவப் பயனோ! கண்டாய்
எவர்களு மறியவிங்கே எனையொரு பொருளா எண்ணி
சபையினில் வந்த போதென் சஞ்சலம் தீர்ந்துதையா! (32)

**வசனம்**

*ஆ! ஆ! ஆ! நான் செய்த தவமோ! என் குலம் செய்த தவமோ! என் மகள் துரோபதை செய்த தவமோ! என்னை பொருளா எண்ணித் தேவரீர் யிங்கே வந்தபோதே என்னுடைய சஞ்சலமெல்லாம் தீர்ந்துதையா வேதவியாசரே!*

**ராசாவுக்கு வியாசர் சொல்லுகிற திபதை**

வஞ்சனை கபடுஞ்சூது வருகொலை சதிதுரோகம்
வெஞ்சின முதலாயுள்ள வெகுவித குற்றம்நீங்கி
நெஞ்சினி லிரக்கம் அன்புநிலை தவறாதபோக்கு
சஞ்சலம் வராதுமன்னா வந்தால்க்ஷணத்தினில் தீருமன்னா
(33)

**வசனம்**

*வஞ்சனை கபடுசூது கொலை முதலான பொல்லாங்குகளையெல்லாம் தள்ளி எப்போதும் நல்ல*

*நீதியாய் நிலை தவறாமலிருக்கப்பட்டவர்களுக்கு ஒரு சஞ்சலமும் வாராது வந்தாலும் நிமிஷ மாத்திரத்திலே நீங்கிப்போம் பாஞ்சால ராசனே!*

**வியாசருக்கு ராசா சொல்லுகிற திபதை**

அரக்கு மாளிகையிலந்த ஐவருமிறந்த ரென்றால்
இருக்கி றாரென்றுசொல்லி யிசைந்தசாஸ்திரிகள் சொன்னார்
செருக்கு மென்மகள் பாஞ்சாலசெல்வியும் பருவமானால்
திருக்களர் முனியேமேல் நான்செய்யும்வாரென்ன சொல்வாய்
(34)

**வசனம்**

*பாண்டவர்களைந்துபேரும் அரக்குமாளிகையி லிறந்து போனார்களென்றுஞ் சொல்லுகிறார்கள். சிறிது சாஸ்திரிகளைக் கேட்டால் இருக்கிறார்களென்றுஞ் சொல்லுகிறார்கள். அர்ச்சுனனுக்குக் கொடுக்கிறனென்று சபதம் பண்ணின என் மகள் துரோபதையானால் பருவமாயிருக்கிறாள். இதற்குமேல் நடக்க வேண்டிய விவரம் சொல்லவேணும் சுவாமி வியாசரே.*

**வியாசர் ராசாவுக்குச் சொல்லுகிற திபதை**

எல்லையில் மனுமந்தாதா செந்தியஎழுவில் லொன்று
மல்லல் சேரிமையசாரல் வைத்தானந்த வில்லை
வல்ல பாண்டவரல்லாமல் மற்றவர்வளைக்க மாட்டார்
சொல்லு மவ்வில்லைக்கொண்டு சுயம்வரம் செய்விப்பாயே (35)

**வசனம்**

*ஆனாலு மனுமாந்தா கையில் வைத்திருந்து எகுவாலே செய்த வில்லொன்றுண்டு அதுயிமோர்ப் பருவதசாரலிலே கிடக்கிறது. அந்த வில்லைப் பாண்டவனேயல்லாமல் மற்றபேர் வளைக்கமாட்டார். அந்த வில்லைக்கொண்டு சுயம்வரம் நட்டு கலியாணத்துக்கு ஆரம்பம் செய்யலாம் பாஞ்சால மகாராசனே!*

**வியாசருக்கு ராசா சொல்லுகிற திபதை**

வேதமோர் நாலும்பாரில் விளங்கவே வகுத்தளங்கள்
நாதனே பிரமக்கியா ஞாநாயகா ஒருவிண்ணப்பம்
கோதிலா மனுக்கள் கைவில்கொண்டு வந்தாலெந்தன்
காதல்சேர் பாண்டவாளை காண்பதெவ்வாறு சொல்வாய்

(36)

**வசனம்**

*சுவாமி! ஒரு விண்ணப்பம் யிமோர்ப்பருவத சாரலிலேயிருக்கிற மனுமந்தாதா வில்லைக்கொண்டு செய்ததினாலே பாண்டவர்களைக் காண்கிறதெப்படி அதைச் சொல்லவேணும் சுவாமி வேதவியாசரே!*

**வியாசர் சொல்லுகிற திபதை**

மருவிய அந்தவில்லை வளைத்தவர்களுக்கெந்தன் பெண்ணை
தருவனென் றோலைபோக்கிச் சகலருமறியச் செய்தால்
இருநிலம் தன்னிலவர் எங்கிருந்தாலும் கேட்டு
வருவரவ் வில்வளைத்து பெண்மாலையும் டுவார்மன்னா
(37)

**வசனம்**

*அந்த வில்லைக்கொண்டுவந்து வைத்துயிதை வளைத்தவனுக்குத் துரோபதையைப் பாணிக்கிரகணம் செய்து கொடுக்கிறேனென்று சகல ராசாக்களுக்கும் சுயம்வரவோலை போகவிட்டால் யிதைக் கேட்டு எங்கேயிருந்தாலும் வருவார்கள் வில்லையும் வளைப்பார்கள் துரோபதையை மாலையிடுவார்கள் யிந்தப்படி செய்யுமையா பாஞ்சால ராசனே!*

**ராசா சொல்லுகிற திபதை**

அப்படித்தானே செய்வேன் அடியேனுன் பாதம்போற்றி!
ஒப்பிலா முனிவர்கோவே உன்னருளிருந்து தானால்
தப்பிலா விசையனுக்குத் தையலைத் தருவேனென்று
செப்புமென் சபதத்துக்கு தீங்கொன்றும் வாராதையா! (38)

**வசனம்**

ஆனால் அப்படியே செய்கிறேன் உம்முடைய கிருபாகடாட்சமிருந்து தானால் அர்ச்சுனனுக்கு என் பெண்ணைக் கொடுக்கிறேனென்று நான் சொல்லியிருக்கிற சபதம் முடியும் சுவாமி வேதவியாசரே.

**வியாசர் சொல்லுகிறது விருத்தம்**

பல்லோர் புகழும்
வல்லாய் கேளாய்
நல்லோர் நினைத்த
தெல்லாம் முடியும் (39)

**வசனம்**

கேளும்! பாஞ்சாலராசனே, நல்லோர்கள் நினைத்த காரியமெல்லா முடியும்.

**இதுவும் வியாசர்**

நிலையுட னுலகாள்
வலிவுள வரசே
நலமுட னெமக்கு
சிலவது தருவீர் (40)

**வசனம்**

நாம் வந்து வெகுநேரம் ஆச்சுது சிலவு கொடுத்து அனுப்பவேணும் பாஞ்சாலராசனே.

**ராசா சொல்கிற விருத்தம்**

தோற்றிய யெந்தன் துயரொடு கவலை
மாற்றிட வந்த மாதவ முனியே
நாற்றிசை புகழும் என்ஞானக் கொழுந்தே
போற்றினேன் போற்றி! போய் வருவீரே! (41)

**வசனம்**

*அப்படியே எழுந்தருளுவீர் சுவாமி வேதவியாசரே!*

**ராசா மந்திரிக்குச்சொல் திபதை**

விளைந்த நல்லறிவின் மிக்கமேன்மை மந்திரியேகேளாய்!
வளஞ்செறி உலகிலுள்ள மன்னவரறி வதாக
உளஞ்செறி சுயம்வரத்தி னோலைகளனுப்ப வேண்டும்
களஞ்செயக் கணக்கன் தன்னைகடுகென அழைத்துவாடா!
(42)

**வசனம்**

*ஆ! ஆ! மந்திரி சகல ராசாக்களுக்கும் சகல தேசத்தார்களுக்கும் அறியும்படியாய் துரோபதை கலியாண ஓலைகளனுப்ப வேணும். ஆகையாலே கணக்கப்பிள்ளையை அதிசீக்கிரமாக அழைப்பியும் பிள்ளாய்.*

**மந்திரி வசனம்**

*அப்படியே அழைக்கிறேனையா!*

**மந்திரி சேர்வைக்காரனுக்குச் சொல்லுகிற விருத்தம்**

அடிக்கடியிரு கைகூப்பி
துடிக்கிற சேர்வைக்காரா
முடுக்கியே கணக்கன்றன்னை
நொடிக்குளே அழைத்து வாடா! (43)

**வசனம்**

*ஆரடா! அடா! ஆசாரவாசல் சேர்வைக்காரா! நம்மிடக் களஞ்சியக் கணக்கப்பிள்ளையை அதி சீக்கிரத்திலே அழைத்துவாடா!*

*அப்படியே அழைத்து வருகிறேனையா!*

**சேர்வைக்காரன் கணக்கப்பிள்ளையை அழைக்கிற திபதை**

பரவை சூழுலகந்தன்னில் பாஞ்சாலநாட்டில் வந்த
திரமிகு செம்பொன்னெல்லாம் செவ்வையாய் எழுதிவைத்து
வரிசையாய் கணக்குசொல்லி வருங்கருணீகா கேளாய்
அரைநிமிடத் திலுன்னை அரசனார் வரச்சொன்னாரே! (44)

**வசனம்**

ஆங்காணும் கணக்கப்பிள்ளாய் நம்முடைய மகாராச உன்னை கொலுவுக்கு அதிசீக்கிரமாய் அழைத்துக்கொண்டு வரச்சொன்னார் வாருங்காணும். அப்படியே வருகிறேன். போவோம் வாரும் சேர்வைக்காரா!

## கணக்கப்பிள்ளை வருகையில் பாடகர் சொல்லுகிற விருத்தம்

முறுக்குடன் பாகை கட்டி முன்பின் உத்தரீகம் தொங்க
குறித்தகை பிடிக ணக்கு கூரெழுத் தாணி கொண்டு
நெறிப்பு டன்கை யைவீசி நெளித்து டன்சைத் தசைத்து
சுருக்குள்(ள) கணக்கப் பிள்ளை தோன்றினன் சபையில் தானே
(45)

## வசனம்

*அகோதெப்படியென்றால் துரோபதைக்குத் திருக்கல்யாணமென்று சகலராசாக்களுக்கும் கலியாண ஒலை எழுத கணக்கப்பிள்ளை வருகிற விதங்காண்க!*

## கணக்கப்பிள்ளை சொல்லி ஆடுகிற தரு

*ராகம்: காம்போதி*

பிரட்டுக்குநானே கணக்கப்பிள்ளை - மற்றபேரெல்லாம்
அணிப்பிள்ளை கீரிப்பிள்ளை
கருத்துடன் நானொரு கதைசொல்லுகிறேன் கேளுங்கோள்
கலகமாம் ஊருக்குள்ளே கணக்கனிட்டது கொள்ளை!
(பிரட்டுக்கு)

வந்தப் பணத்துக்குச் சிலவெழுதிப் போட்டு
வாரியென் வீட்டில் கொட்டிக்கொட்டிக் கொள்வேன்!
ரொக்கம் வந்தபணம் எங்கேயென்றா லறியேனென்று

வழக்காட நான்தொடை தட்டிக் கொள்வேன்;
மெத்த தெரிந்தரைவரும் போலிருந்தால் ஊமத்தங்காய்
தொட்டுக்கொள்வேன் தலை நட்டுக்கொள்வேன் பாரும்!
(பிரட்டுக்கு)

சூரியன் திசைமாறி நடந்தாலும் நானிட்ட
தொகையை சாதிக்காமல் விடுவேனோ! கீழ்
தூக்கிப்போட்டு செக்கை செக்கையாய் அடித்தாலும்
சுருக்கிலே நான்வசப் படுவேனோ போ! போ!
ஆருக்கு மெந்தன் திருட்டுப் பிரட்டுக்கள்
அகப்படுமோ சற்றும் தகப்படுமோ - பாரும் (பிராட்டுக்கு)

ஆயிரப்பிரட்டன் இரண்டாயிரப் பிரட்டன் என்று
அல்லாரும் சொல்வார்கள் அதுபாடே நான்
ஆஸ்தான பொக்கிஷம் உடவாரம் புரட்டுவேன்
அந்தப் பிரட்டனும் எனக்கீடா சும்மா
ஓயாமல் பேசிகருக் கோலையைக் கட்டி
உலகை பிரட்டாய் கலகப்பிரியன் பாரும் (46)

(பிராட்டுக்கு நானே)

**ராசாவுக்கு சேர்வைக்காரன் சொல்லுகிற வசனம்**

*அகோ! ராச பரமேசுவரா தேவரீர்! உத்தரவுபடிக்குக் கணக்கப்பிள்ளையை இட்டுக்கொண்டு வந்தேன் சாமி!*

### கணக்கன் போற்றி திபதை

மன்னவா கோவேபோற்றி! மகுடவர்த்தனனே போற்றி!
நன்னயமிகு பாஞ்சால நாட்டுக்குத்தலைவா போற்றி!
தன்னயமாக யிந்தசதிர் பெறுகொலுவுக் கிப்போ
என்னையிங் கழைத்தசேதி யியம்புவீரெந்தாய் போற்றி (47)

### வசனம்

*சரணம்! சரணம்! சுவாமி இராசபரமேசுவரா! தேவரீர் கொலுவுக்கென்னை அழைப்பித்த காரியம் அருளிச் சய்ய வேணுஞ்சாமி!*

### ராசா கணக்கனுக்கு சொல்லுகிற திபதை

கண்மணியான எங்கள்கன்னி பாஞ்சாலி தன்னை
வண்ணம்சேர் வில்வளைத்து மாலைதானிடுவ தென்று
திண்ணமாய் (ஐம்ப)அன்பத்தாறு தேசத்து ராசாக்களுக்கு
வண்மையாய்த் திருக்கலியாண ஓலைகள் எழுதுவாயே! (48)

### வசனம்

*ஆரடா! அடா! நம்மிட ஆஸ்தானராயசக் கணக்கப் பிள்ளாய். நம்மிட குமாரத்தியான துரோபதையை வில்வளைத்து மாலையிடுவதென்று ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களும் அறியும்படியாய் திருக்கலியாண ஓலைகள் எழுதும் பிள்ளாய்!*

**கணக்கன் வசனம்**

*அப்படியே எழுதுகிறேனையா.*

*கணக்கப்பிள்ளை ராசாவுக்கு வாசித்துக் காண்பிக்கிற திருமுகச் செந்திரிக்கை*

*செய செயா! ஸ்ரீமன் மண்டலேசுவரா! அசகாய சூர உத்தண்ட கோரதண்ட பாண்டித்திய பிறவீண பிரபுகோரான ஆரிய அங்க வங்க களிங்க வங்காள - மத்திர - மாளவ - மரகத - மதங்க மச்சம ராட விராட கராட கர்னாட கன்னட காஷ்மீர கஞ்சக கந்தர காந்தார காம்போச காம்பீர காளிம்ப குருகு குகுத குச்சர குந்தள கௌ(வு)ள கேகைய கேரள கொங்கண கோசல சாவித சங்கிராத சிங்கள சீன சுதஷ்ண சுரா பாண்டிரர் குர்சென சேர சோழ சோனக திராவிட திரிகர்த்த நிஷத பற்பற பவுண்டர பாண்டிய புளிந்த விபவ விதற்ப விதேக ஒட்ட தேச முதலான அகண்ட மண்டலாதிபதிகளுக்கும் பாஞ்சால ராசா அறிவித்த துரோபதை சுயம்வர சுபசோபன கலியாணத்திருமுகச் செந்திரிக்கையென்ன வென்றால்,*

**இளைய வேந்தர்களெவர்களும் அறிய,**
**வளையா வில்லை வளைத்தவருக்கு**
**துளிர்போல் மேனி துரோபதையான**
**தளையார் மாலைத் தையலைத்தருவேன்!**

**ராசா கணக்கப்பிள்ளைக்குச் சொல்லுகிற வசனம்**

*ஆரடா கணக்கப்பிள்ளையாய் அந்தக் கலியாண ஓலைக்கு மஞ்சள் காப்பிட்டு செந்திரிக்கை போட்டு அந்த சேனாதிபதி கையில் கொடுக்கும் பிள்ளாய்.*

*அப்படியே கொடுத்தேன் சாமி!*

**கணக்கப்பிள்ளை சேனாதிபதிக்குச் சொல்லுகிற திபதை**

சேனைக்காவ னேயிந்தத் திருமுகச் செந்திரிக்கை
ஊனமில்லாத நல்லஉத்தம தூதர் கையில்
தானிதைக் கொடுத்தனுப்பிச் சகலர்க்கும் அறிக்கைசெய்து
ஆனதோர் சுயம்வரத்துக் கனைவரும் வரச்செய்வாயே; (49)

**வசனம்**

*கேளும் சேனாதிபதி! யிந்த கலியாணத் திருமுகச் செந்திரிக்கை நல்ல தூதர் கையிலே கொடுத்தனுப்பி சகல ராசாக்களுக்கும் அறிக்கை செய்து எல்லோரையும் வரச்செய்யும் பிள்ளாய்!*

*அப்படியே வரச்செய்கிறேன் ஐயா சுவாமி!*

**சேனாதிபதி தூதருக்குச் சொல்லுகிற திபதை**

ஆரடா தூதரே என்னாண்டவனுரைப்ப படிக்குச்
சீருடனெழுது மிந்தத் திருமுகச் செந்திரிக்கை

வீரிய வேந்தர்க்கெல்லாம் விளக்கமாயறியக் காட்டி
சூரியன் மறையுமுன்னே சுருக்கினில் வருகுவீரே! (50)

**வசனம்**

ஆரடா தூதர்களே நம்மிட ஆண்டவனுரைத்தரப் படிக்கு யிந்த கலியாண ஓலையைச் சகல ராசாக்களுக்கும் காட்டியறிவித்துச் சூரியன் அஸ்தமனமாகுமுன்னே வாருங்கோள் பிள்ளாய்!

அப்படியே செய்து வருகிறோமையா!

**தூதர் போனபின்பு ராசா மந்திரிக்குச் சொல் திபதை**

காரியந் தெரிந்தமந்திரி கருத்துடன் முனிவர்சொன்ன
நேரிய நெடுவில்லிந்த நிமிடத்தில் வரவேவேணும்
வீரிய புலிபோல கொத்த வீரகிங்கிலியராலே
கூரிய வில்லையிந்த கொலுவுக்கு தருவிப்பாயே (51)

**வசனம்**

கேளாய்! மந்திரி வேதவியாசர் சொன்னாரே வில் அந்தவில் இந்த நிமிஷத்துக்கு வரவேணும். கிங்கிலியரைக் கொண்டு அதைத்தருவியும் பிள்ளாய் மந்திரி.

அப்படியே தருவிக்கிறேனையா சுவாமி!

**மந்திரி சேனாதிபதிக்குச் சொல்லுகிற விருத்தம்**

மல்லடு தளபதி
சொல்லுமென் மொழிகேளாய்
யொல்லையின் முன்சொன்
னவில்லினை வரச்செய்வாய் (52)

**வசனம்**

*கேளாய்! தளபதி, நம்மிட ஆண்டவன் சுயம்வரத்துக்கு நேமித்திருக்கிறவில்லை, அந்தவில் நிமிஷத்தில் தருவியும் பிள்ளாய்!*

*அப்படியே தருவிக்கிறேனையா.*

**சேனாதிபதி கிங்கிலியருக்குச் சொல்லுகிற திபதை**

அடங்கா கிங்கிலியரே நீர்ஐம்பதாயிரம் பேர் சென்று
இடங்கான யிமயசார்பில் யிருக்கின்ற எகுவின்வில்லை
திடங்காண புரட்டித்தூக்கி திரண்டதின்புயத்திற் தாங்கி
தடங்காண கொண்டுவந்து சபையினில் வைத்திட்டீரே (53)

**வசனம்**

*ஆரடா கிங்கிலியரே இமைய மலைச்சாரலிலே யிருக்குதே அந்த எகுவின் வில்லை எடுத்துக்கொண்டு வந்து மகாசபையில் வையுங்கோள் பிள்ளாய்.*

*அப்படியே எடுத்துக்கொண்டு வருகிறோமையா.*

**கிங்கிலியர் எடுத்துக்கொண்டு வருகிற கவி**

திறப்படும்வீரா புறப்படலாமோ
நெறிப்புடனிப்போ புறப்படுவோமே!

*தரு ராகம்: பருசு, தாளம்: ஆதி*

கிங்கிலியர்கள் நாங்களே - கெட்டிக்
கிங்கிலியர்கள் நாங்களே!

பங்கமில்லாமக மேருவைக்கூட
பாரோடசைத்து வேரோடெடுக்கும் (கிங்கிலியர்)

அட்ட கெசத்தை வட்டமிட்ட சக்கரவாளமலை
கொண்டு வாங்களென்றாலும் போய்தாங்கி வருவோம்!
(கிங்கிலியர்)

திக்கு மலைகளைத் தாக்குவோமிந்த
திரண்ட புசத்தில் தூக்கிடுவோம்! (கிங்கிலியர்)

கைக்கும் புகழ்பெற்ற பாஞ்சாலபூபதி
கட்டிவரச் சொன்னால் வெட்டிவருவோம் (கிங்கிலியர்)
(54)

**வசனம்**

*அப்படியே எடுத்துக்கொண்டு வருகிறோமையா!*

**வில்லை எடுத்துக்கொண்டு வருகிறபோது தரு.**

*ராகம்: தோடி* *தாளம்: ஆதி*

ஆனைகளை வாரிச் சின்னப்பூனை களைப்போல
அடித்தோம் யித்தனை பளுவில்லை யடாதூளி;
கோட்டை கொத்தளத்தை தலை
மூட்டை போலவே யெடுப்போம்
யித்தனை பளுவில்லையா நிந்தூளி.

குன்றுகளை வாரிவார நின்றுயரந்
தடித்திடுவோம் யித்தனை பளுவில்லையடா

மலைபிடுங்கி வேரோடே மரம்பிடுங்கி பாரோ
டடித்திடுவோம் யித்தனை பளுவில்லையடா;

ஆனைமுழுங்கி அச்சுரதங்களைத் தூக்கிச்
செக்குசெக்காய் போலெறிவோம் யித்தனைபளு வில்லையடா;

இரும்புலக்கை பாறுகளை கீறுகீறாய் நூறுகோடி
பேத்தெறிந்தோம் யித்தனை பளுவில்லையடா;

தொந்திப் போர்த்தாய்; யித்தனையல்ல எத்தனையோ
ணாமெடுத்தோம் யித்தனை பளுவில்லையடா! (55)

**தூமகேது கவி**

கண்டர் தம்மை
துண்டு செய்வீரா

திண்டிறல் வில்லைக்
கொண்டு வந்தோமே (56)

**வசனம்**

*வெகு பராக்கு! சேனாதிபதியே வில்லையெடுத்துக் கொண்டு வந்தோமையா.*

**சேனாதிபதி ராசாவுக்குச் சொல்லுகிற திபதை**

வெற்றிசேர் மன்னாபோற்றி! வீரவிக்கிரமனே போற்றி!
மற்றொருவரு மொப்புமில்லா மகுடவர்த்தனனே போற்றி!
உற்றஉன் மொழிப்படிக்கு உயர்ந்தகிங்கிலியர் சென்று
கொற்றமரம் நெடியவில்லை கொண்டுவந்தார்கள் சுவாமி! (57)

**வசனம்**

*அகோ! ராசமார்த்தாண்ட ராச உத்தண்ட ராசகெம்பீரா தேவரீர் உத்தரவு படிக்கு ஐம்பதினாயிரம்பேர் வீரகிங்கிலியர் போய்வில்லை யெடுத்துக்கொண்டு வந்தார்கள் சுவாமி!*

**ராசா சேனாதிபதிக்குச் சொல்லுகிற திபதை**

தாட்சி யொன்றில்லா நல்லதளபதி சொல்லக்கேளாய்
ஆட்சியா யந்தரத்தி லாடும்சக் கரத்துக்குள்ளே
சூட்சியா யகப்படாமல் சுழலுமச் சேந்திரத்தை
காட்சியாய் மேலேகட்டி கனத்தவில்லை தன்கீழ் வைப்பாயே!
(58)

**வசனம்**

*கேளும் தளபதியே ஆகாசத்திலே கிறுகிறென்று ஆடிக்கொண்டிருக்கும் சக்கரத்துக்குள்ளே ஆருக்கும் அந்த சூட்டுசும மகப்படாமல் சுழலுகின்ற யெந்திரமச்சத்தை மேலே கட்டி அந்த எகுவில்லை அதன் கீழே வைக்கச் சொல்லும் பிள்ளாய்!*

*அப்படியே செய்கிறேனையா சுவாமி!*

**பொதுவசனம்**

*அகோ கேளுங்கோள் சபையோரே பாஞ்சால ராசா சகல ராசாக்களுக்கும் சுயம்வரக் கலியாண ஓலைகளனுப்பி வில்லையுங்கொண்டு வந்து வைத்து மேலே எந்திரமச்சையுங் கட்டியிருக்கிறபோது அங்கே உப்பரிக்கையின் மேலே அந்தப்புரத்திலே துரோபதை விதனப்படுகின்ற விதங்காண்க.*

*தோழிகள் துரோபதைக்குச் சொல்லுகிற விதங்காண்க.*

**அரிவை துரோபதையே எங்களன்னையே கேளாய் நீதான்**
**வரவர மெய்யிளைத்து மதிமுகம் வேறுபட்டு**
**மருவு நித்திரை யில்லாமல் மகிழ்ச்சியாய் விளையாடாமல்**
**இரவோடு பகலுமேங்கி யிருக்கும் வாறென்ற சொல்வாய்!** (59)

**வசனம்**

அகோ கேளுமம்மா துரோபதையே உன் சரீரமெல்லாம் இளைத்துத் துரும்பாய் போச்சுது முகம் வேறுபட்டிருக்கிறது அன்னமும் பொசிக்கவில்லை. நித்திரையும் செய்யவில்லை. மகிட்சியாக விளையாடவும் இல்லை. ராத்திரியும் பகலும் ஒருவித ஏக்கங்கொண்டு இருக்கின்றாயே! அது எதினாலே எங்களுக்குத் தெரியச் சொல்லுமம்மா!

**துரோபதை தோழிகளுடனே சொல்லுகிற திபதை கண்டா ராகம்**

என்னுயிர் தோழிமாரே என்னென்று சொல்வேனம்மா
இன்னில மாதர்க்குள்ளே என்போலும் பாவியுண்டோ
நன்னய மென்மனத்தில் நானொன்று நினைத்திருக்க
தன்மை யில்லாததெய்வம் தானொன்று நினைத்ததையோ(60)

**வசனம்**

ஆ! ஆ! என் பிரியமான தோழிப் பெண்களே! நான் என்னென்று சொல்லுவேன். உலகத்திலே பிறந்த பெண்களிலே என்னைப்போலும் பாவியுண்டோ. ஆனாலும் நானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது பார்த்தீர்களா தோழிமாரே!

## தோழிமார் சொல்லுகின்ற திபதை

தோகை துரோபதையே யெங்கள் துரைப்பெண்ணே
 சொல்லக் கேளாய்!
வாகை பாண்டவரரக்கு மாளிகை
 தனக்கு தப்பி
ஓகையா யிருக்கிறார் களென்றுரைத்த
 சாஸ்திரங்கள் பொய்த்துப்
போகுமோ விதயங் கொண்டு புலம்பவே
 வேண்டாம் தாயே! (61)

**வசனம்**

*அகோ கேளுமம்மா துரோபதையே! பாண்டவர் களைந்துபேரும் அரக்கு மாளிகைக்குத் தப்பியிருக்கிறார் களென்று எல்லோரும்சொன்ன சாஸ்திரங்கள் பொய்யாகுமோ அவர்களுக்கு ஒருதுன்பமும் இல்லை. நீ விதனப்படவேண்டாம் தாயே?*

*துரோபதை தோழிக்குச் சொல்கிற திபதை*

தையலே கேளாயிங்கே! சகலரும் வந்துசூழ்ந்து
துய்யவில் வளைக்குமிந்த சுயம்வரசபை யில்நாளை
வையகம் புகழும்குந்தி மக்களிலெனக்கு வாய்த்த
கையில் வில்லழகனான காளையைக் காணுவேனோ! (62)

**வசனம்**

ஆ! ஆ! ஆ! என் பிரியமான தோழியே! நாளையதினம் சகல ராசாக்களும் வில்வளைக்க வருகிற சபையிலே அந்தக் குந்திதேவி மக்களான பாண்டவர்களும் வருவார்களோ அதிலே என் பிராண பதமான ஆணால்(ன்) அழகனை நான் கண்ணிலே காணுவேனோ தோழி.

**தோழி திபதை**

**மைப்படிக் கண்ணேயெங்கள் மாதுதுரோபதையே கேளாய்!**
**அப்படித் தானேமன்ன ரனைவரும் பார்த்திருக்கச்**
**செப்பமாய் வில்வளைத்து செயமிகு விசையனுன்னைக்**
**கைப்பிடித் திழுக்கயெல்லாம் காணவே போருமம்மா (63)**

**வசனம்**

கேளும் தாயே துரோபதையே காணப்போகிறேனா? வென்றல்லவோ சொல்லுகிறாய். நாளையத்தினம் சகல ராசாக்களும் பார்த்திருக்க அந்த அர்ச்சுனராசன் வில்வளைத்து மாலையிட்டு உன்னைக் கைப்பிடித்து அழைத்துக்கொண்டு போகிறபோது எல்லோருந்தான் காணப்போகிறார்கள்.

அதுக்கென்ன தடையா?

### துரோபதை கண்டகராகம்

மங்கையங் கொருத்திக்காக மலைகளுங் காடுந்தாண்டி
எங்கைனாம் போகப்போகி றோமென்றெண்ணி யிருந்தாரானால்
துங்கவில் வரவழைப்பார் சுயம்வர மென்னமாமோ
இங்குநாம் நினைத்தஎண் ணம்எப்படி முடியுமம்மா? (64)

### வசனம்

*அடிபெண்ணே தோழி. அந்தப் பாண்டவர் களைந்துபேரும் ஏதோ ஒரு பெண்ணுக்காக இத்தனைக் காடுமலைகளையெல்லாந் தாண்டி நாமெங்கே போகப்போகிறோம். போவென்றுயிருந்தார் களானால் யிந்தவில்லை யார் வளைக்கப் போகிறார். யிந்தக் கலியாண சுயம்வரம் என்னமாய்ப் போமோ என்னுடைய எண்ணம் எப்படி முடியுமம்மா?*

### தோழி சொல்லுகிற திபதை

வல்ல பாண்டவர்கள் தப்பிவர வேணுமென்று சொல்லி
அல்லொடு பகலுமாக அனேக தெய்வத்தைப் போற்றி
மெல்லிநீ செய்துவந்த விரதங்கள் பழுதுபோமோ?
சொல்லுமுன் னெண்ணம் தன்னைதிருவுளம் துணைசெய்யுமம்மா!
(65)

**வசனம்**

அம்மா துரோபதையே பாண்டவாள் வரவேணுமென்று சொல்லி அல்லும் பகலும் எப்போதும் தெய்வங்களைக் குறித்து நீ செய்த விரதங்கள் எல்லாம் பழுதாய் போமோ? ஒருக்காலும் போகாது உன் எண்ணம் எப்படியும் திருவுளம் துணை செய்யுமம்மா!

**துரோபதை சொல்லுகிற திபதை**

நாட்டினி லிருந்தாரானால் நமதுகலியாண சேதி
கேட்டமாத் திரலத்திலந்த கீர்த்திபர் வருகுவார்கள்
காட்டினி லிருந்தாலிந்த காரியம் தெரியாதாஇல்
தாஷ்டிகர் வாராவிட்டால் தையலேநா னென்னசெய்வேன்?(66)

**வசனம்**

அடியம்மா தோழி! பஞ்சபாண்டவாள் நாட்டிலே இருந்தால்தான் இந்தக் கலியாண சேதியைக் கேட்டுவருவார்கள். சில காட்டிலே மலைகளிலே யிருந்தார்களானால் இந்த சமாசாரம் தெரியாமல் வராமலிருந்துவிட்டால் நானென்ன செய்யப் போகிறேனம்மா.

**தோழிகள் சொல்லுகிற திபதை**

சித்திர மயிலே எங்கள் செல்விதுரோ பதையேயந்த
சுத்த வீரர்க் கொருத்தர் சொல்லாம லிருந்திட்டாலும்

சத்திய மிலையா மன்னன் சபதமொன்றி லையாயுந்தன்
பத்தியு மிலையா சும்மா பரிதவிக்கா தேயம்மா! (67)

**வசனம்**

*கேளாய் துரோபதையே அந்தப் பாண்டவர்களுக் கொருத்தர் சொல்லாமல் போனாலும் உலகத்திலே சத்தியமில்லையா உன் தகப்பன் சொல்லியிருந்த சபதமுமில்லையா உன்னுடைய பக்தியுமில்லையா; யிதுகளெல்லாம் பொய்த்துப்போமா? சும்மா எண்ணாது எண்ணி ஏன் பரிதவிக்கிறாய்?*

**துரோபதை சொல்லுகிற திபதை**

அக்கினி தனில்பிறந்த வன்றே என் பிதாநேமித்த
தக்கவில் லழகன்யிந்த சபைதனில் வந்துதோன்றி
யிக்கணம் வில்வளைத்து எனைமணம் செய்யாவிட்டால்
மிக்கசெந் தழலேமூட்டி விழுந்துயி ரிழப்பேனம்மா! (68)

**வசனம்**

*கேளுங்கோள் தோழிமாரே! அக்கினியாலே நான் பிறந்த போதே என் தகப்பன் எனக்காக நேமித்த அந்த ஆணாலழகன் யிந்த சபையில் வந்து வில்வளைத்து யின்றையத் தினம் என்னை மாலையிடாவிட்டால் அந்த அக்கினியைத் தானே மூட்டி அதிலே விழுந்து என்னுயிரை மாய்த்துக் கொள்வேனம்மா!*

**தாதிகள் சொல்கிற திபதை**

கண்ணினுண் மணியே!உந்தன் கருத்தினில் விதனம்வேண்டாம்
எண்ணமுன் னெண்ணமெல்லாம் யின்றைய தினம்கைகூடும்!
அண்ணலாருந் தந்தந்தைஅவை யினிலழைக்கா முன்னம்
வண்ணமா யலரிங்கமாதே! நீஎழுந்து வாராய்! (69)

**வசனம்**

*கேளுமம்மா துரோபதையே நீ ஒன்றுக்கும் விதனப்பட வேண்டாம். உன்னுடைய எண்ணமெல்லாம் இன்றைக்கு எப்படியும் நிறைவேறும். ஆனாலும் உன் தகப்பன் சுயம்வரச் சபைக்கு அழைக்கா முன்னமே திருமஞ்சனமாடி அலங்கரித்துக் கொள்ள எழுந்திருமம்மா.*

**பாடகர் சொல்லுகிற பொதுவசனம்**

*இந்தப்படி துரோபதை விதனப்பட்டுக் கொண்டுயிருக்க அங்கே பாண்டவர்கள் அரக்கு மாளிகைக்குத் தப்பி வேதவியாசர் சொல்படி பிராமண வேஷங்கொண்டு வேத்திரகீயத்திலிருக்கும்போது யாத்திரை செய்யும் பிராமணர் வருகிற விதங்காண்க.*

**யாத்திரை பிராமணன் வருகிற பொதுவிருத்தம்**

பாத்திர மறையோர் போல பாண்டவா ளைந்து பேரும்
வேத்திர சீயந் தன்னில் மேவியங் கிருக்கும் போது

யாத்திரை யாகப் பூமியாகவும் போய்த்திரிந் துபார்த்த
சாத்திர வலவ னந்த சபையினில் தோன்றி னானே! (70)

## பிராமணன் சொல்லி ஆடுகிற தரு

*ராகம் : சங்கராபரணம்தாளம் : ஆதி*

யாத்திரை செய்யும் சாஸ்திர வேதியன்
என்னைப் போலுண்டோ கேளீர்! (யாத்திரை)

தோத்திரம் செய்து பூமி பிரக்ட்சணம்
சுத்தி நான் வந்தேன் கேளீர் (யாத்திரை)

காசி முதலான புண்ணிய ஸ்தலங்களைக்
கண்டு சேவித்தேன் மேலும்
கருக்கும் பல தீர்த்தமாடி
கருத்தினில் பாலித்தேன் கேளீர்! (யாத்திரை)

முனிவர் வாழும் மலைகள் வனங்கள்
முழுதும் போய் கண்டேன்! - யின்னம்
முத்தரும் பரிசுத்தரைப் போற்றி
மும்மலங்களும் விண்டேன் கேளீர்! (யாத்திரை)

அஷ்டதிசையுள்ள பட்டணங்களை
அடங்கலும் பார்த்தேன் நான்
அங்கங்கே நன்றாய்த் தங்கியிருந்து
ஆசையுந் தீர்த்தேன் கேளீர்! (யாத்திரை)
(71)

**பாண்டவாள் போற்றிக் கவி**

தீதிலா மறையோர் திலதனே போற்றி!
மூதறி வுணர்ந்த முனிவனே போற்றி!
பூதலும் புகழும் பூசுரா போற்றி!
வேத வேதியனே மெல்லடி போற்றி! போற்றி! (72)

**பாண்டவாள் யாத்திரை பிராமணனைக் கேழ்க்கிற திபதை**

அந்தணா் கோவே! வேதமறிந்த மாதவனே! பாரில்
முந்துநூற் குலத்துளோர்க்கும் முதல்வனே போற்றி நீதான்
எந்தவூர் எந்ததேசம் எங்கிருந் தெவ்விடம் போறீர்?
விந்தையா யிவடம்வந்த மேன்மையே துரை செய்வீரே! (73)

**வசனம்**

*அகோகேளும் வேதவேதியரே தேவா! எங்கேயிருந்து எங்கே போகிறீர்? உம்மிடதேசம் எது நீர் இருக்கும் ஊர் எது? யிங்கே வந்த காரியம் என்ன தெரிய சொல்லுமையா சுவாமி!*

**அய்யர் சொல்லுகிற திபதை**

மலைகடல் தலஞ்சேவித்து மகாபுண்ணிய தீர்த்தமாடி
நலமிகு மன்னர்நாடு நகரங்களெல்லாம் பார்த்து
பலமிகு செயபாஞ்சாலன் பட்டணம் தன்னிற்தங்கி
மெலியுமென் இளப்புதீர்ந்து மேனாடு பார்க்கப்போறேன்! (74)

**வசனம்**

மலைகள் முதலான புண்ணியஸ்தலங்களைச் சேவித்து புண்ணிய தீர்த்தங்கரையாடி ராசாக்களுடைய நாடு நகரமும் பார்த்து பாஞ்சாலராசாவினுடைய பட்டணத்திலே சில நாளிலிருந்து யிளைப்பாறி அவ்விடம் விட்டு மேற்கு தேசத்தினுடைய அதிசெயத்தைப் பார்க்க வேணுமென்று போகிறோன் காணும்.

**பாண்டவாள் கேழ்க்கிற விருத்தம்**

துதிபெறு பாஞ்சால
பதியுறையிம் தேசத்து
ததிசய முண்டானால்
விதியென விளம்பாயே (75)

**வசனம்**

பாஞ்சால தேசத்திலேதாகிலு முண்டானால் சொல்லுமையா சுவாமி!

**பிராமணன் பாண்டவாளுக்கு சொல்லுகிற நெடில் விருத்தம்**

**ஆனந்த பயிரவி**

அண்ணல் பாஞ்சாலன் துரோணனைக் கொல்ல
அடல் துஷ்டதூய் மனையளித் தோன்
அர்ச்சுனன் றனக்கு கொடுப்ப தற்காக
அரிய துரோபதை தனைப் பெற்றான்

மண்ணில் பாண்டவர்கள் அரக்கு மாளிகையில்
மாண்டவர் எனச் சொல்லக் கேட்டு
மனமது தளரசாஸ் திரமறிந் தோர்
மற்றவ ரிருக்கின் றாரென்ன

எண்ணிய பெரியோர் சொல்வழிப் படியே
எகுவினால் செய்த வில் லொன்றே
எடுத்திதை வளைத்து எந்திர மச்சத்தை
எய்தவர்க் கென்னுட மகளை

பண்ணுறத் தருவே னெனமண ஒலை
பாரில் வாழ் மன்னருக் கனுப்பி
பாண்டவர் வரவு பார்த்திருக் கின்றான்
பகருவே னிதுவதி செயமே! (76)

**பாண்டவாள் சொல்லுகிற விருத்தம்**

வாய்வர தேறியே
ஆய்வரும் உணர்ந்தோம்
தூய்வரு மறையோய்
போய் வருவீரே; (77)

**வசனம்**

தேவர் சொன்ன சமாச்சாரம் எல்லாம் தெரிந்துகொண்டோம். நீ போய் வாரும் சுவாமி.

**பாண்டவாள் குந்திதேவிக்கு சொல்லுகிற திபதை**

விங்கள மொன்றில்லாமல் கமன்மனம் பரிவுகூற
எங்களைப் பெற்றதாயே யிணையடிக்கமலம் போற்றி!
துங்கபாஞ் சாலன்செய்யுஞ் சுயம்வரவேள் விக்காக
பொங்கமாய் நாமுமங்கே போய்வர வேணுமம்மா! (78)

**வசனம்**

*கேளுமம்மா தாயே; பாஞ்சால தேசத்துக்கு நாமும் போக வேணுமம்மா!*

**குந்திதேவி திபதை**

அன்று வஞ்சனையாய் செய்த அரக்குமாளிகையில் தப்பி
குன்றிய மறையோர் வேஷம் கொண்டொளித் திருக்கும்நீங்கள்
சென்றிடிற் கொடியபாவி தீயதுரியோ தனன்தான்
யின்றொரு சூதுசெய்வான் என்றுளம் நடுங்கு தப்பா! (79)

**வசனம்**

*என்னுடைய அருமை மக்களே அந்த அரக்கு மாளிகைக்குத் தப்பி பிராமணர் வேஷம்கொண்டு ஒளித்துக்கொண்டு இருக்கும் நீங்கள் பாஞ்சால தேசத்துக்குப் போன சேதி மகாபாவியான துரியோதரன் அறிந்தால் இன்னம் கபடவஞ்சகம் செய்வானென்று என்மனம் நடுக்கமாயிருக்கிறதப்பா.*

**பாண்டவாள் சொன்ன குறுவிருத்தம்**

"சத்துரு நம்மை
யெத்தினி செய்யினும்
பெற்றிருந் தாயே
சத்தியந் துணையே" (80)

**குந்திதேவி சொல்லுகிற திபதை**

கன்றுபோம் வழியே ஈன்ற காராவும் போவதுண்டு
சென்றுதாய் போகும்வாறு சிறுகன்று போவதுண்டு
என்று மைந்தர்களே உங்கள் யிஷ்டத்தின் படியாகட்டும்
நன்றினி நானும் வாரேன் நாமினிப் போவோம்வாரீர் (81)

**வசனம்**

*கேளுங்கோளப்பா என்னுடைய அருமை மக்களே கன்றுபோன வழியே பசுவம் போவதுண்டு. பசு போகிற வழியே கன்றும் போவதுண்டு. அப்படிப்போல உங்களின் இஷ்டப்படிக்கு நானும் கூட வருகிறேன் வாருங்கோளப்பா.*

**பாடகர் சொல்லுகிற கவி**

விதிவசப் பார்ப்பாராக வேஷங்கொண் டிருக்குமந்த
சதிபெறு பாண்டவாளும் தாய்குந்தி தேவிதானும்
முதுமறை யோர்கள் வாழுமுன்னூடறறு மங்கலத்தைவிட்டு
நதிவளஞ் செறிபாஞ்சால நாட்டுக்கு நடக்கின்றாரே! (82)

**தரு**

கன்னி துரோபதை கலியாணக் காட்சியைக்
கண்களிக்க நாமும் கண்டு வருவோம்;
பன்னும் புகழ்பெற்ற பாஞ்சால தேசமும்
பட்டணமும் கண்ணில் பார்த்து வருவோம்! (கன்னி)

சூதான பாவி துரியோதனனுக்கு தோற்றாமல்
நாம்போய் சுருக்காய் வருவோம்!
மாதாவும் நாமும்மறு வேடமாய் சென்றுமங்கை
மணம் பார்த்து மறுகால் வருவோம்! (கன்னி)

மாந்துளிரைப் போலும் மங்கை துரோபதை
மாலையிடல் கண்டு மறைவாய் வருவோம் (கன்னி)

நெடுமுடி மன்னர் நெருக்குஞ் சபையிலே
நிமிஷம் நேரம்சற்று நின்று வருவோம்
படுமரவக் கொடி பாவி யறியாமல்
பாரவில்லைச் சற்றும் பார்த்து வருவோம்! (கன்னி)

அந்தரந் தன்னிலே எந்திர மச்சைநின்
றாடும் சுழலை யறிந்து வருவோம்!
சுந்தரமான சுயம்வர வேள்வியில்
தோற்புங் கெலிப்புந் தெரிந்து வருவோம்! (83) (கன்னி)

**பாடகர் பொது விருத்தம்**

வடகரு முலகி லெங்கு மகத்தான கீர்த்தி பெற்ற
குடகரு மனுவின் வல்ல குணதரு மனேகர் கூடி
தொடுவளை முன்கை யான துரோபதை சுயம்வ ரத்தின்
தடமிகு சாலை தன்னில் தான்வென் றுதோன்றி னாரே! (84)

*ராகம் : முகாரி தரு*

தேசதேசாதிபர் வந்தார் - உலகில் உள்ள
தேசதேசாதிபர் வந்தார்
தேசாதிபர்கள் கோடி
திருமணக்கோலம் நாடி (தேசாதிபதி)

கன்னட தேசாதி கஞ்சத் தேசாதிபதி
கந்தர தேசாதிபதியும் இன்னமும் நல்ல
உன்னித குதபதி உச்சித குச்சிதபதி
ஒட்ட தேசாதிபதியும் - புவியிலிராச
மின்னிய சங்கராதிபதி விளங்குஞ் சிங்களபதி
விருத்த தேசாதிபதியும் - யின்னமும் கீர்த்தி
பன்னிய பற்பளபதி பகரும் பவுண்டரபதி
பாரிப் பாண்டிராப் பதியும் இவர்கள் முதல்
துன்ன மண்டலீகர் கோடி - சுயம்வரச் சாலைதேடி
பன்னுந் துரோபதையை நாடி - பாஞ்சாலனைக் கொண்டாடி
(85)
(தேசாதிபதி)

## நீலன் வருகிற தரு

*ராகம் : சவுராஷ்டகம்*

நீலம் வந்தானே மகாசெய - நீலன் வந்தானே
சீலனிவனே பரிபாலனிவனே - நிறை
கோலினிலகு செயசாலி யெனவே யிதோ (நீலன்)

அதிலிதான குணவெகு சவுரியமுள வீரன்
அடையலர் தமையொரு நொ்டியினில் வெலுமொரு சூரன்;
ய.....மும் நல்லசதிருள பதிகளபதி நாபதியெனும் தீரன்!
தையல்களுக்கு சகதல மதிலுருவுடன் வரு
மழகிய மாரன்! ராசகெம்பீரன்!
கதிர்பெறு மணிமுடி சிரசினிலணிந்து
துதிபெறு சபையினில் வரிசையி னடந்து (86)
(நீலன் வந்தானே)

## மகததேசாதிபதி வருகிற தரு

*ராகம் - புன்னாகவாரளி*

மகத தேசாதிபன் வந்தான் - மகாசெப
மகத தேசாதிபன் வந்தான்;
செக தலத்தினில் வெகுபுகழ் படைத்தவனே
செயமிகு நம்முள சுயம்வரச் சபையினில் (மகததேசாதிபன்)

வெற்றிவிற் கையிற் பிடித்து - ரணமுக
வீரசிங்கம் போல்துடித்து - விளையில்லா

ரத்தின கவசம் தொடுத்து - காலளவுக்கும்
ரஞ்சித சங்கு விடுத்து
மெத்த பலத்தில் மிகுத்தே தொடுத்திடும்
மத்த கெசத்தை நிகர்த்தொடு வெற்பென! (87)
(மகததேசாதிபன்)

**பகதத்தின் வருகிற தரு**

பகதத்தன் வந்தான் - யிதோ செய
பகதத்தன் வந்தான்
அகிலத்தில் புகழ்பெற்ற வெகுவுக்கிற மிகுசெட்டி (பகதத்தன்)

ரத்தின மணிமகுடஞ் சூட்டித் - தோளில்
ரஞ்சித மாய்த்தூணி பூட்டி
வெத்தி(ற்றி) வில்லைக் கையில் காட்டி - காலில்
வீரகண்டா மணியாட்டி
கொற்ற மலைபோல் வெகுதிறல்
பெற்ற புலிபோல யேதுங்
குறைவற்ற நிறைவுற்ற உலகத்து மதிபற் குளிவன்
மெத்த அதிவிக்கிரம சதத்தென மெச்ச (88)
(பகதத்தன்)

**சராசந்தன் வருகிற தரு - ஓரடிச் சிந்து**

*ராகம்: அசாவேரி*

சராசந்தன் வந்தான் - செய
சராசந்தன் வந்தான்;
கராகண்டிதன் யெனக் கெதிரெங்கும்
யிராதென்று நினைத்திடல் கொண்ட (சரசந்தன்)

மரத்தலருயிர் கூத்துவனெனக் குடிப்போன் - யிந்த
மண்டலந்தனில் சண்டையெங்கே யென்றுதுடிப்போன்
ஆற்றல்சேர் பெருங்காற்றையும் கட்டிபிடிப்போன் - மதி
படர்ந்த பகையைத் துடந்தெவ்வித முடிப்போன் வெகு
தோற்றமாம் சுத்தவீரன் பாரமாற்றிகத்திலோர் -
சூரன்யாருந்தொடா
அண்ட கடாகங்களோடே சண்டையிடா நின்ற
சகாவிண்ட மகாசண்ட புகாதண்டம் விடாகண்டன் (89)
(சரசந்தன்)

## சிசுபாலன் வருகிற தரு நாதநாமக்கிரிகை

சிசுபாலன் வந்தான் - மகாவீர
சிசுபாலன் வந்தான்
விசுவாச மகபாத வசுதேவன் மகனாகி
திசைராசர் தமையோரை கொசு 'கு' போலுமதியாத (சிசுபாலன்)

கண்ட பிரகண்டன் - அதிவுக்கிற
சவுரிய தண்டன்
சண்டைக்கு மிண்டன் - அடங்காத
தாஷடிக் கண்டன் யிந்த
அண்டரண்ட பகிரண்ட மெண்டிசைநவ
கண்டமட்டு மிசைகொண்ட மண்டலீகன்!
கனவுக்கிர தீரன்! மகாறணகள சுத்தவீரன்
கருநீல முகில்போல வருகோல எதுபாலர்
மிகைசால வெகுகால பகைமூளு மகிபால (90)
(சிசுபாலன் வந்தான்)

**சேரன் வருகிற தரு**

*ராகம் : பூரி கல்யாணி*

சேரன் வந்தானே! - சபைதனில்
சேரன் வந்தானே!
மார்பன் பொற்பணைத்தாரன்
விற்பொலிசூரன் அற்புததீரன் சற்குண (சேரன்)

மன்னிய மலைநாட்டைப் புரக்கும் மன்ன
கயிலை மலைதனில் வளர்சிவனைப் போற்றும் பிரசன்னன்
தன்னிக ரில்லாத செயவீரப் பன்னன் - யிந்த
தரணி முழுதும் புகழும் பாக்கிய சம்பன்னை
உன்னும் நெடிய வில்லோன் நிறை
உண்மை தங்கிய சொல்லோன்;
ஒப்பில்லா பனைமாலை பிடித்து
மெய்ப்புடன் கதிர்வேலைப் பிடித்து; 91 (சேரன்)

**சோழன் வருகிற தரு**

*ராகம்: புன்னகவாரளி தாளம் : ஆதி*

சோழராசன் வந்தானே! சபைதனில்
சோழராசன் வந்தானே!
சூழுங்கட லுலகோ ரேழும் புகழ்பரவு (சோழன்)

சொல்லரிய சூரிய குலத்தோன் - அந்த
தோகைப் பாகனைத் தொழுநலத்தோன் - சுரர்பரவும்

வல்ல இந்திரனுக்கும் பெலத்தோன்
சுடரிலங்கு விடஞ்சேரு மாணிக்கக் குண்டலத்தோன்
வல்லிக் கொடியுடையோன் - கையில்
வாங்கிய வேல்படையோன் மருவிய
வானாட்டுக் கினியதிரு வளர்சோ ணாட்டுக்குரிய 92
(சோழராசன்)

**பாண்டியன் வருகிற தரு**

*ராகம் : சாவேரி தாளம் : ஆதி*

பாண்டிய ராசன் வந்தானே! யிதோ சபையினில்
பாண்டிய ராசன் வந்தானே!
தாண்டிய திரைகடல் புனையுலகினில்
வேண்டிய புகழ்பெறு மதிபதி - நல்ல (பாண்டியராசன்)

சந்திர குலத்தில் வருந்துங்கன் - புவியில்
நாளுந் தமிழை வளர்க்கும்நற் பிரசங்கன்
இந்திரன் துதிக்கும் களங்கன் - அகஸ்தியற்கு
இஷ்டமாகிய சதுரங்கன்
விந்தையாகவே மார்பில் வேம்பின் மாலையணிந்து
மிகுவெத் தினுயிர் மகரக் கொடிபுடை
திகழப் புரவலர் மகிழ சபைதனில் (93)
(பாண்டியராசன்)

**துரியோதன மகாராசன் வருகிற**

*ஓரடிச் சிந்து - ராகம்: காம்போதி, தாளம், மிசிரம்*

துரைமக்க ளனைவர்கது முலகுக்குமொரு கர்த்தன்
துரியோதன மகராசன் வந்தான் - கர்த்தன்
துரியோதன மகராசன் வந்தான்;
நரருக்குள் வெகுஉக்கிர மிகுசத்துரர்கள் மிக்க
நம்பினே மென்றடிதாழ தம்பிமார் பின்புடைசூழ (துரைமக்க)

திசையெட்டு விலைபெற்ற நவரத்தின மழுத்தி
திகழும் பொன்முடி தரித்து - நல்ல
திடமிக்க பெலனுத்த முழுவச்சிர புசகீர்த்தி
திருத்தோளிலங்கரித்து - யிந்த
செகசக் சிரமதுபெற்ற தவளக்கு டைகவிக்க
யிருகை பலர்குவிக்க கவிகைத் திரளசைக்க
கணிகைத் துகைநடிக்க கடிகைப் படைதுடிக்க
அரவக்கொடி பிடிக்கயெதிர் விக்கிரமர் துடிக்க
முரசங்கம் தவில்பம்பை பலசங்க முழங்க
சதுரங்கன் றணரங்கன் முமுசிங்க மெனவிங்கே (துரைமக்க)
(94)

*சகுனி வருகிற தரு ராகம் - தேசியம்*

சகுனி வந்தானே - பொல்லாத
சகுனி வந்தானே!
செகந்தனி லவனை யன்றி
கபடவஞ்சக ரிலையெனும் படி (சகுனி வந்தானே)

சூதுக்கும் புனசுருட் டுக்குமுதல் பாதம் யிந்த
துரோகி செய்வதெல்லாம் கெட்ட விரோதம்;
வாதுக்குந் தொடர் வழக்குக்குந் துற்போதம்
கொண்டுமாந் தலைமனுஷன் தலைசெய்வர் பேதம்
சாதகன் படுபாவி கரடவஞ் சகனாகி
வாழ்ந் தாலும் பார்க்க மாட்டான்
தாழ்ந் தாலும் தாங்க மாட்டான்! (95)

(சகுனி வந்தானே)

**கர்னன் வருகிற தரு**

*ராகம்: முகாரி*

**ஓரடிச் சிந்து**

கர்னராசன் வந்தான் - உதார
கர்னராசன் வந்தான்;
மன்னுமூ வுலகிலுண்ணும் வாறுவெகு
சொற்னகா னமுதலன்னதா னம்செய்யும் (கர்ணராசன்)

குடைக்கும் படைக்கு மிவனே! - நல்ல
குலத்தி நலத்தி லிவனே! - தூய
குணத்தி மனத்தி லவனே! - நிதி
குறிக்கும் நெறிக்கும் யிலவனே - யிந்தப்
படிக்குளிடிக்கு நிகர் முடுக்கி யெதுத்தவர்கள்
நடுக்க மெடுத்தலறி யிடுக்கமுறச் சமரில்
ஒடுக்கி யடுக்கியுயி துடிக்கத்துடிக் கவொரு
நொடிக்கு ளடித்துபகை முடிக்குஞ் சமத்தியலுயர் (96)

(கர்னராசன்)

**அசுவத்தாமா வருகிற தரு**

*ராகம் : முகாரி தாளம் : ஆதி*

அசுவத்தாமா வந்தார் - யிதோ சேய்
அசுவத்தாமா வந்தார்
விசுவத் தினிலுயர் திசையெட் டினும்வெகு
மிசைபெற் றிடுபல புசவிக்கிர மனென (அசுவத்தாமா)

வில்வித்தைக்கு சிலாக்கியன் - சதுர்
வேதத்தினும் வெகுயோக்கியன் - செய
துரோணமுனிக் கொருபாக்கியன்
செல்வத்தினிலுயர் நிருபர்கள் சரனெனக்
கல்விக்கொடு கடலென நிறைசபைதனில் (அசுவத்தாமா)
(97)

**சல்லியன் வருகிற தரு**

**ஓரடிச் சிந்து**

சல்லியன் வந்தானே - சமத்தன்
சல்லியன் வந்தானே!
சொல்லிய வறுமையும் வில்லியல் முழுதையும்
புல்லிய பெச்பல வல்லிய மெனவிதோ (சல்லியன் வந்தானே)

கருதலர் மனநடுங்கத் - தோள்வலி
கண்டுமலை யுமொடுங்க வரிசிலை - கையிலிலங்க
எதிர்வரு மதயானையும் விலங்க
யிரவியெ னும்படிமிகவு மிலங்கிய

மணிமகுடம் புயவலைய மணிந்துயர்
அழகின் மிகுந்திடு விடையென்னும் புவி
கிடுகிடெனும் படிஅதிர நடந்திதோ (98) சல்லியன்

**பலபத்திரன் வருகிற தரு**

*ராகம்: ஆனந்த பயிரவி தாளம்: ஆதி*

பலபத்திர ராமர் வந்தார் - மகிமையுள்ள
பலபத்திர ராமர் வந்தார்;
நிலையுற்ற கடல்புனை உலகத்தில் செயமிகு (பலபத்திர)

கையிற் கலப்பையிலங்க மார்பகத்தினில்
கமகமென்ற பனைமாலையது துலங்க
மெய்யிலே கரசமலங்கரித்து - ஒன்னலர்
விதுமுகம் வெறுட்டுள்ள மிகக்கலங்க
கையுறு மலையென மெய்யுரை பொருளென
துய்யனஞ் சபைதனில் வையகம் துதிசெய (98) (பலபத்திர)

**கிருஷ்ணன் வருகிற தரு**

*ராகம் - பரிசு*

கோபால கிருஷ்ணர் வந்தார் - மகிமையுள்ள
கோபால கிருஷ்ணர் வந்தார்;
கரபால மச்சினனார் பூபால ரட்சகனார் (கோபால)

நந்தன் மனைவளர்ந் தோர் - தாய்
தந்தை துயர்களைந் தோர் - கொக்கர
வந்தவன் தலைபிளந் தோர் - யிந்த உலகளந்தோர் (கோபால)

அலகை யுயிர்குடித் தோர் - பாம்பின்
தலையின் மிசைநடித் தோர் - கஞ்சன்
மெலியும் படிமடித் தோர் - வலியப்பகை முடித்தோர் (கோபால)

அன்று மலையெடுத் தோர் - மிகத்
துன்று மழைதடுத் தோர் - பாரி
னின்ற விழாவெடுத் தோர்
கன்று விழவெடுத் தோர் (கோபால) (100)

**பிராமணக் கூட்டங்கள் வருகிற விருத்தம்**

தக்கபாஞ் சாலன் பெற்ற தையல் துரோபதைக் குநல்ல
மிக்ககல் யாண மென்று விளம்பிய சேதி கேட்டு
திக்கினிற் பார்ப்பா ரெல்லாம் திரள்கூட் ட கூட்ட மாக
திக்கென வந்து வந்து திகழ்சபை சேர்க்கின் றாரே! (101)

**தரு**

பொற்கொடி துரோபதைக் கலியாணத்துக்கு
போய்வரு வோம்காணும்;
சற்குண ராகியபாஞ் ராசன்கை
தாராள மாங்காணும்! (பொற்கொடி)

அப்பய பட்டரே திப்பய பட்டரே
அல்லாரும் வாரீர்;
கப்பயரே கிழசுப் பயரே நீரும்
கூடவாரும் காணும்! (பொற்கொடி)

நிஷ்டூரம் நேக்கேண்டா துஷ்டப்பையா
சேஷா கடவாரை யோடா
கஷய் படாமல்காசு கண்ணிலே
காணலாம் கடுகவாருங் காணும்! (பொற்கொடி) (102)

*கிழப் பார்ப்பானும் நொண்டிக்கால் பார்ப்பானும் சொல்லுகிறது*

எப்படியாகிலும் எல்லார்க்கு முன்னே போய்
யிடம்பார்த்துக் கொள்ளவேணும் - யிந்தத்
தப்பிடி தேவடியாள் மகனால்வழி சரியில்லை காணும்
கள்ளமில்லாமலே வெள்ளியும் செம்பொன்னும்
அள்ளிக் கொடுப்பானாம்!
உள்ளபடியது மெல்லச் சொல்லுயென
கொள்வீர் கொள்ளைகாணும் (எப்படியாகி)

வாருமென்று தட்டில் கூரையும் சேலையும்
வைத்துக் கொடுப்பானாம்;
வீரன் பாஞ்சாலன் கன்னிகா தானங்கள்
வேணது செய்வானாம்;
எப்படியாகிலு மெல்லோர்க்கு முன்னேபோய்
யிடம் பார்த்துக் கொள்ள வேணும் (103)

*கூனுப் பார்ப்பானும் குருட்டுப் பார்ப்பானும் சொல்லுகிறது*

ராத்திரி யென்றும் பகலென்றும் பாராமல்
நடக்க வேணும் காணும் - யிந்த
நேத்திர மில்லானா சனிபோலவே - வந்து
நேர்ந்தா னேகாணும்
பட்சத்துடனே யோர்லட்சம் லட்சம்பொன்னை
தெட்சணை யீவானாம் - யிந்த
தட்சணை யீந்தால் பாஞ்சால மகாராசன்
அட்சய மாயிருப்பான்!
பத்தஞ்சு பொன்பெறு பட்டஞ்சுதோ வத்தி
முத்தும் தருவானாம் (104) (ராத்திரி)

ஓட்டமாயோடி சபைக்குள்ளே நான்முன்னே
உட்கார்ந்து கொள்ள வேணும்!
நாட்டமாய் முன்னேகொடுக் கின்றதெட்சணை
நான்வாங்கிக் கொள்ள வேணும்!
செய்கைக் கழகான தங்கக்கட கங்கள்
செய்து போடுவானாம்!
விங்கள மில்லாமல் தங்கப் பவுத்திரம்
விரலுக் கிடுவானாம்!
நன்மனதாய் கெட்டிபொன் முலகுல்லாய்
நமக்கே கொடுப்பானாம்!
என்மகனுக்கும் எனக்கும் தந்தால்குறை
எப்படிப் போனாலென்ன? (ஓட்டமா)

சத்திரமதனில் சமராரதனை வெகு
சட்டமாய்ச் செய்வானாம்;
பட்டுமித மற்றக்கட்டித் தயிர்களைக்
கொட்டிக் கொடுப்பானாம்;
இட்டலி தோசைவடை யதிரசம்
இஷ்டமாய் போடுவாராம்;
இத்தனை யித்தனை யென்று கரிகளை
யெண்ணத் தெரியாதாம்!
குத்துப் பருப்பும் புத்துருக்கு நெய்யும்
மெத்தவும் வார்ப்பாராம்! (105) (சந்திரமதனில்)

## பாடகர் சொல்லுகிற விருத்தம்

கோலமாம் துரோப தைக்குக் குறித்திடு சுயம்வ ரத்தின்
சாலையி லனேகர் வந்து சதிருடன் சூழ்ந்த போது
சீலமாங் குயவன் வீட்டில் திகழ்மறைப் பார்ப்பா ராகக்
கோலங் கொண்டிருக் குமைவர் கொலுவுக் குவருகின் றாரே
(106)

பாண்டவளைந்து பேரும் குந்திதேவிக்குத் திபதை

எங்களைப் பெற்றதாயே யிணையடி போற்றி! போற்றி!
பொங்கமாம் குலாலன்வீட்டில் பொருந்திநீ யிருந்தாயானால்
தங்கிய திருக்கல்யாண சபைதனில் நாங்களும் போய்
அங்குள்ள கோலம் பார்த்து ஐவரும் வரோமம்மா (107)

**வசனம்**

*கேளுமம்மா தாயே! நீயிந்த குயவன் வீட்டிலே தானே இரு. நாங்களைந்து பேரும் துரோபதை திருக்கல்யாண சபைக்குப் போய் அங்கே நடக்கிற அதிசயத்தையெல்லாம் பார்த்து வருகிறோமம்மா.*

**குந்திதேவி திபிதை**

மக்களே கேளீர்! நீங்கள் மறைவிடமாகவே போய்
தக்கதோர் திருக்கலியா ணசம்பிரமர மல்லாம் பார்த்து
மிக்கவஞ் சகஞ்செய பாவிவிரல் துரியனறிந் திராமல்
பக்குவ மாயிருந்து பாலரே வருகுவீரே! (108)

**வசனம்**

*கேளுங்கள் என் அருமை மக்களே நீங்கள் மறைவிடமாகவே போய் கலியாண சம்பிரமமெல்லாம் பார்த்து மகாபாதகனான துரியோதரன் அறியாமல் சாக்கிரதையாய் போய் வாருங்கோள் மக்களே.*

**பாடகர் சொல்லுகிற விருத்தம்**

வினைவ ழிப்பார்ப் பாராக வேஷங் கொண்டிருக்கு மந்த
பனிமதி குலத்து வேந்தர் பாண் டவா ளைந்து பேரும்
தனிபல வுக்கி ரவேங்கை தான்பசுத் தோல்போர்த் தாப்போல்
கனல்நீறு பூத்தாய் போலும் களரியிற் றோன்றி னாரே! (109)

*ராகம்: தன்னியாசி தாளம்: மிசிரம்*

**வேதியர் வருகிற தரு**

வேதியர் வந்தாரே - காலந்தள்ள
வேணுமென்று கள்ளவேடக் கொண்ட
தீதிலா துரேர்பதை செய்தவமீடேற (வேதியர்)

அக்கினி யானது மூங்கிலிலே போய்
அடங்கியிருந் தாப்போல் - மேலும்
ஆதித்தன் புலிமேகத் துக்குள்ளே
அடங்கியிருந் தாப்போல் (வேதியர்)

உக்கிர வேங்கைப் பசுந்தோலைப் போர்த்துக்
கொண்டொ டுங்கிக் கிடந்தாப்போல் - நல்ல
யொளிபெற்ற மாணிக்கம் கரித்துணியின்
முடித்தொதுங்கிக் கிடந்தாற் போல்
முக்கிய நவரத்தினம் சேத்தி லமுந்தி
முழுதுமறைந் தார்போல் - வெகு
மிக்க மடைத்தலைக் கொக்குகளைப் போலும்
கைக்கயம் பூனைக்குள் புக்கினது போலும் (110)
(வேதியர்)

**பாஞ்சாலன் திபதை**

மைந்தனே! துஷ்டத் தூய்மா மதிளரண் மனைக்குச் சென்று
தந்தையென் மகளுற்(ன்) தங்கைதையல் துரோபதை தனக்கு

விந்தையர் யலங்கரித்து மிக்கதாதி யர்கள் சூழ
சுந்தர சபைக்கிப் போது சுருக்குட னழைத்துவாடா! (111)

**வசனம்**

*கேளும் மகனே துஷ்டதுூய்மா நீர் அரண்மனைக்குப் போய் நம்மிட துரோபதைக்குத் திருமண கோலமாய் அலங்கரித்து தாதிகள் சூழத்தக்கதாக இந்த சபைக்கு சுருக்காய் அழைத்து வாடா.*

*அப்படியே அழைத்து வரு கிறேனையா!*

## துஷ்ட தூய்மன் அரண்மனை வாசலிலே நின்று தாதிகளுக்குச் சொல்லுகிறது

அமைனறு தாதிமாரே நமது சோதரிக் கிப்போதுன்
தமையன் வந்தானிங் கென்றுவிமலமாய் சொல்லுவீரே! (112)

**வசனம்**

*ஆரடித்தாதிப் பெண்களே என்னுடைய தங்கையாகிய துரோபதைக்குத் தமையன் வந்திருக்கிறானென்று சொல்லுங்கோ தாதிமாரே;*

*அப்படியே சொல்லுகிறோமையா சுவாமி!*

**தாதிகள் துரோபதைக்குச் சொல்லுகிறது**

மாதரசே போற்றி! ஓதுமென் மொழிகேளாய்!
மேதினியோர் புகழுமென் சோதரன் வந்தனனே! (113)

**வசனம்**

*சரணம்! சரணமம்மா! துரோபதையே, உன்னுடைய தமையனான துஷ்டதூய்ம மகாராசன் அரண்மனை வாசலிலே வந்திருக்கிறாரம்மா.*

**துரோபதை சொல்லுகிற கொச்சகம்**

தண்ணா ரருள்நம துதந்தை பாஞ்சா லனுக்கு
கண்ணா யவதரித் தோய்கஞ் சமலர்தாள் போற்றி!
எண்ணா ஒருமையு டன்என்னு டன்கூடப் பிறந்த
அண்ணா நீவந்த விதம்அன் புடனேசொல் வாயே! (114)

**துஷ்டதூய்மன் சொல்லுகிற திபதை**

மங்கை யர்க்கரசே யெந்தன் வாழ்வே யென்னுடன் பிறந்த
தங்கை துரோபதை யேயிப்போ சாற்றுமென் மொழியைக் கேளாய்!
பொங்க மரம்நமது தந்தை புகன்றது உனைப் போது
மங்கள சபைக் கழைத்துவரச் சொன்னா வாருமம்மா! (115)

**வசனம்**

*கேளுமம்மா என்னிட தங்கையாகிய துரோபதையே நம்மிட பிதாவாகிய பாஞ்சால மகாராசன் உன்னை அந்த கலியாண சபைக்கு அழைத்துக்கொண்டு வரச் சொன்னார் வாருமம்மா.*

*அப்படியே வருகிறேன் அண்ணாவே!*

## பாடகர் சொல்லுகிற பொது விருத்தம்

பதிதனில் விரு(ந்)து பெற்ற பாஞ்சால ராசன் செய்யும்
சதிர்பெறு சுயம்வ ரத்தின் சபாமண் டபத்தில் திவ்விய
கதிர்முடி மன்னர் வந்து கதித்தி டுகளரி தன்னில்
துதிபெறு மயிலைப் போலும் துரோபதை தான்வந் தாளே!
(116)

## துரோபதை வருகிற தரு

*ராகம்: பூரி கல்யாணி*

துதிபெறுமதி முகரதி பனிநவரச
நிதிதுரோ பதைவந் தாள்!
சதிர்பெறு மினமதி நுதலது வயங்க
கதிர்முடி யெதிர்கழல் அரசர்கள் மயங்க (துதிபெறு)

வானோ! அளியினமோ! வனமேயிம்மாது கருங்கொண்டை!
வழுவோ! கருவோ! வலையோ! அலையோ!
வஞ்சிவிழிக்கெண்டை
தேனோ! பாகோ! பாலோ! பழமோ! செல்விமதுர வாக்கு!
செண்பகமோ! யிலகுங்குமிழேதில் மலரோ! யிவள் மூக்கு!
குன்றோ! பந்தோ! பம்பரமோ! பொற்குடமோ! யிவள்கொங்கை!
குளிர்செந் தாமரையோ! கொடியிடை யிவள் செய்கை!
நின்றோய் துடியோ! நூலோ! நேரிழை யிவளிடைதான்!
நேற்று தோரண வாழைகளோ! ஒளிநிகரி கன்றதுடைதான்

நின்ற திதுபுது மையென்று பலபுகல
மன்ற மயிலநி கர்துன்று சபைநடுவே! (117)
(துதிபெறு மதிமுக)

### துரோபதை தாதிகளுக்குச் சொல்லுகிற திபதை

நவரச நயமிகுந்த நல்லதாதிகளே கேளீர்!
தவறிலா யெந்தன் தாதைதான் செயும்வேள்விக்காக
புவனியி லிருந்துவந்து பொருந்தியிங் கிருக்கும் வேந்தர்
யிவரிவ ரின்னாரென்று யெந்தனுக் கியம்புவீரே! (118)

### வசனம்

*அடிதாதிப்பெண்கேள யிந்த சுயம்வர கலியாணத்துக்காக ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களும் வந்துயிருக்கிறார்களே இவர்கள் இன்னாரின்னா ரென்று தெரியச் சொல்ல வேணும் தாதிப் பெண்களே!*

*அப்படியே சொல்லுகிறேனம்மா. .*

### துரோபதைக்குத் தாதிகள் சொல்லுகிற ராசவர்க்குத் தரு

காதள வோடியெதிர் தருவேல் விழி
மாதரசே மங்கைது ரோபதையே கேள்!
தீதிலாம் மருவாகி மேதினியாள் துரியோதரன்
மகராச னிவனம்மா!
சீதள சந்திரனைப் போல்முக சுந்தரமே திகழ்
எங்கள் துரோபதையே கேள்!

பூதல மில் விரோதமே செய்
துரியோதரன் தம்பிமா ரிவரம்மா!

வல்லிக் கொடியிடை நல்லபிடி நடை
செல்வத்துரைப் பெண்ணே துரோபதையே கேள்!
கொல்லைக்குப் பல்லி குடிக்குச் சகுனியென
றெல்லாரும் சொல்பவ னிவனம்மா!
எல்லவரும் புகழ் மெல்லியரே நிறை
சொல்லி மதுரத் துரோபதையே கேள்!
வில்லின் வலிமையில் வெல்லும் திரமயில்
வல்ல அசுவத்தா மனிவனம்மா! (119)

கடைக்கண் காயலினாலே விடைக்கண் வேந்தர்கள் நெஞ்சை
யுடைக்கும் சுந்தரமான துரோபதையே கேள்!
துடிக்கும் துவளும்வஞ் சிக்கொடிக்கும் நிகர்த்தொருகைப்
பிடிக்கு ளடங்குமிடை துரோபதையே கேள்!
நொடிக்குள் கலியாணத்தை முடிக்கவே ணுமென்று
துடிக்கும் சல்லியரச னிவரம்மா!

கெண்டைப் பகர்விழி கண்டைப் பொகுதுமொழி
தொண்டைக் கனியிதழி துரோபதையே கேள்!
கண்டன் பயப்படு முத்தண்டன் விக்கிரமமுள்ள
கண்டன் சாரசந்த னிவனம்மா!

வண்டில்லை யென்றுதுவண்டு மெலிந்தே வரும்
கண்டிடாச் சிற்றிடை துரோபதையே கேள்!

எண்டிசையும் பலமண்ட லமும்சொற்
பிரசண்ட நீலராச னிவரம்மா!

வசையற்ற பாஞ்சால விசனத்தினை யகற்றும்
நிசரத்தினம் நிகர் துரோபதையே கேள்!
விசைபெற்ற தடமற்ற கசகர்த்தன் யிணையற்ற
புசவுற்ற பகதத்தனி வனம்மா!

பசையுற்ற வழுதுக்கும் ருசிபெற்ற நலமிக்க
வசனத்தி லழகான துரோபதையே கேள்!
அசைவற்ற பெரிதான திசையெட்டி லினிதான
யிசைபெற்ற சிசுபால ரிவரம்மா!

கலசத்தை மெருகிட்ட கலசத்தை நிகரொத்த
நலசித்திர முலைபெற்ற துரோபதையே கேள்;
உலகத்தில் குறைவற்ற யிலகுத்த புகழ்பெற்ற
பரிசுத்த பலபத்திர ரிவரம்மா!

கலைபெற்ற பிறையொத்து சிலைவத்த நுதலுக்கு
வரிசைத் திலதம்வைத்த துரோபதையே கேள்!
புலனுத்திரு தடத்தில் கலையைத் திருடிவைத்த
நிலமெச்சு நலகிருஷ்ண ரிவரம்மா!

கூருற்ற வேல்போலும் நீருற்ற சேல்போலும்
நேருற்ற வாழ்(ள்)விழி துரோபதையே கேள்;
காருத்த திருமேனி கிருஷ்ணர் பின்வந்த
பேர்பெற்ற காத்தகி யிரவம்மா!

வாருத்து செவ்விள நீரொத்து திகழ்கின்ற
யேருத்த தனதுரோ பதையேகேள்!
பார்முத்தும் புகழ்பனைந் தார்முழுதும் திகழ்வயப்
போர்முத்து மவிர்சேர னிவரம்மா!

மூண்டயங்கிய காதைத்தீண்டியப் பாலும்போய்
தாண்டிய சேல்விழி துரோபதையே கேள்!
யீண்டிய தமிழெல்லாம் வேண்டிய துரைத்திடும்
பாண்டிய மகராச னிவரம்மா!

சேண்டரு முகில்போலும் மூண்டுள யிருள்போலும்
நீண்ட கருங்குழல் துரோபதையே கேள்!
தூண்டும் பரிதேர் மார்த்தாண்டன் குலத்தில்வரு
ஆண்டவன் புகழ் சோழரிவரம்மா!

## பாடகர் பொது விருத்தம்

தாதிய ரிப்ப டிக்குத் தையல் துரோபதை தனக்கு
ஓதமில் மன்னர் தம்மை யிவரிவ ரென்று காட்ட
பூதலம் புகழ்பாஞ் சாலன் புத்திரன் துஷ்ட தூய்மன்
(நாதல்) நாடிய ராசர்க்கு நலமுடன் சொல்கின் றானே! (120)

## துஷ்டதாய்மைன் திபதை

வில்லிது கணைகளிது மேல்மச்ச யெந்திரமிது
வல்லவில் வளைத்தே யெந்திரமச்சைய யெய்தவீரன்
நல்லது ரோபதைக்கு நாயகனவனே சொன்னேன்
புல்லும் வில்வளைக்க வல்லர் புறப்பட்டீர் புறப்பட்டீரே (121)

**வசனம்**

கேளுங்கோள் ராசாக்களே! இதுதான் வில்லு மிதுதானம்புகள். அதுதான் மேலே சுழலுகின்ற மச்சயெந்திரம் யிந்தவில்லை வளைத்து அந்த மச்சயெந்திரத்தை விழயெய்யப் பட்டவனோ அவனேயிந்த துரோபதைக்கு நாயகன். ஆகையால் அவ்வளவு சமர்த்துள்ளவர்கள் எழுந்திருந்து வில்லை வளைக்கலாம்.

## வில்லைக் கண்டுபயந்து போகிறவன் சொல்லுகிற திபதை

நல்லதுபோம் போங்காணும் நமன்தனை அழைத்துவந்து
வில்லென்று வளைக்கச்சொல்லி வருதரவில் கொல்லப் பார்த்தாய்
சொல்லுமுன் பெண்ணும் வேண்டாம் தோற்பொடுகெலிப்பும் வேண்டாம்
அல்லதென் னுயிரிருந்தால் அனந்தம் பெண் தருவேனே!(122)

**வசனம்**

கேளும் துஷ்டதூய்ம மகாராசனே நல்லகாரியம் செய்தாய் எதுகாணும் எமனைக் கொண்டுவந்து வைத்து அதுக்குவில் என்று ஒரு பேரிட்டு அத்தை வளைக்கச் சொல்லிக் கொல்லப் பார்த்தீர் உன்பெண்ணும் வேண்டாம். அதிலே தோற்பும் கெலிப்பும் வேண்டாம். உயிரிருந்தால் அனேகம் பெண்களைக் கொள்வேன் போங்காணும் போம்.

**வில்லைக் கிட்டவந்து பார்த்தவன் சொல்லுகிற திபதை**

கண்டமாத் திரத்தில் நெஞ்சுகலங்குது கையும் காலும்
விண்டிட நடுக்குதிந்த வில்லையார் வளைப்பார்
அண்டரும் வளைக்க மாட்டார் அரசரும் வளைக்கமாட்டார்
பெண்டுக்கா யாசைப்பட்டேன் பேருயிர் மாய்க்க மாட்டேன்
(123)

**வசனம்**

அடா அப்பாயிந்த வில்லைக் கண்ட மாத்திரத்திலே நெஞ்சு கலங்குகிறது. கையும் காலும் விடவிடவென்று நடுங்குகின்றது. யித்தையார்தான் வளைக்கப் போகிறார்கள். தேவர்களும் வளைக்கமாட்டார் யிந்த ராசாக்களும் வளைக்க மாட்டார். அந்த ஒரு பெண்ணுக்காக ஆசைபட்டு அநியாயமாய் உயிரை போக்கடித்துக் கொள்ளுகிறதா. நன்றாயிருந்தது! நன்றாயிருந்தது.

**வில்லைத் தூக்கிப் பார்த்தவன் சொல்லுகிற திபதை**

பூவை துரோபதையைப் பார்த்தால் போகவும்மனதுவல்லை
தாவும் யிவ்வில்லைத் தொட்டால் தப்பாமலுயிரைக் கொல்லும்
மேவும் நாமினிக் கூழுக்கு மீசைக்கு மாசைப்பட்டால்
ஆவதே தெந்தனா வெங்கப்பரணை ஆகாதப்பா! (124)

**வசனம்**

என்ன காரணமிது? யிந்தத் துரோபதையைப் பார்த்தால் அப்பாலே போகிறதுக்கு மனது வரவில்லை. மனது வந்தாலும் காலாடவில்லை. நல்லதுயிந்த வில்லைப் பார்த்தால் பயமாயிருக்கிறது. அப்படி அல்லவென்று வளைக்கயேற்பட்டால் தப்பாமல் உயிரைக் கொல்லும். ஆனால் கூழுக்கும் மீசைக்கும் ஆசைப்பட்டாலெப்படி? நானொரு காரியம் சொல்கிறேன் கேளுங்கள். அப்படிக்கு என்னாலகாதப்பா!

**வில்லைப் புரட்டிப் பார்த்தவன் சொல்லுகிற திபதை**

**மல்லுக்கு ளுயர்பாஞ் சாலமன்னனே கேளாயிந்த**
**வில்லுக்கோர் சரணமந்த மெல்லிக்கோர் சரணமப்பா!**
**ஒல்லிக்குள் நீதான்யா ருயிருக்கொருலை வைத்தாய்நான்**
**தொல்லைக் காட்டாளி யில்லாதோளெல் லாம்வலிக் குதையோ!**
(125)

**வசனம்**

கேளும் காணும் ஒய் பாஞ்சால ராசனே! யிந்த வில்லுக்கொரு கும்பிடு. யிந்த பெண்ணுக்கொரு கும்பிடு யிருந்தாப் போலிருந்து யாருடைய உயிருக்கோ உலை வைத்தாய் இப்படியென்று அறிந்தால் வரமாட்டேன். வந்ததுக்குப் பிரையோசனம் யிந்தத் தோளெல்லாம் வலிக்குதையோ யிதுதான்.

**இதுவும் அவன்**

புரட்டிப் பார்த்ததுக்கே யிந்த பெருமூச்சு தோள்கடுப்பும்
அரட்டலு மிளைப்பு மிந்த அவதியுமானால் மேலே
மருட்டிய கண்ணா உந்தன் மகளுக்காய் வில்வளைத்து
பருத்ததோர் மன்னர் மாண்டால் பழிவரும் சொன்னேன்
சொன்னேன் (126)

**வசனம்**

*யிந்தவில்லைப் புரட்டிப் பார்த்ததுக்கே யித்தனை பெருமூச்சு யிரண்டு தோளும் தேள் கொட்டினது போலே கடுக்கிறதும் ஆயாசமும் இளைப்பும் கண்டு மனுஷன் பிழைக்கிறதே யருமை ஆகும். ஆனால் இனியிந்த வில்லை எடுத்து நிறுத்தி வளைத்து அம்புதொடுத்து ஒருவன் அந்த மச்சயெந்திரத்தை விழத் தள்ளுவானா! உன்னிடமகள் மேலாசையாலே இத்தனை பேரும் மாண்டுபோககாலம் வந்தது. பழி வேண்டாம்! வேண்டாம்! பழிவரும்! பழிவரும்! சொன்னேன்! சொன்னேன்!*

**வில்லை மேலே தூக்கிப் பார்த்தவன் தரு**

*ராகம்: புன்னகவாரளி*

ஆர்வளைப் பாரப்பா யிந்த வில்லை
நாமறியாமல் வந்தோம் யிதென்ன தொல்லை
பாரவளைத் தாலும்மதி பரிந்தவில்லை
பார்த்த போதிலெல்லாம் தோத்துப் போவதல்லாமல்
(ஆர்வளைப்பார்)

தொட்டெடுத்த தோளும் கடுக்குதே - கைகள்
சோர்ந்து போர வெழ்க்கம் கெடுக்குதே
நட்டுப் பார்ப்பமென்று கட்டிப் பிரண்டாலும்
நகர்ந்தா லல்லவோ சற்றே நெகிழ்ந்தா லல்லவோ சிகி;
(ஆர்வளைப்பார்)

விருது மன்னவர் கெருவம் அடக்குதே மக
மேருமலையைப் போலும் கிடக்குதே
வெற்புலிபோல் பத்தி தூக்கினாலும் அசைந்தாலல்லவோ
கைக்குளி சைந்தாலல்லவோ சும்மா (ஆர்வளைப்பார்)

பாஞ்சா லனுக்கிது தர்மமோ மத்தப்
பார்த்திபர் மேலென்ன வர்மமோ!
வானசார் மெல்ல எடுத்து நிறுத்தினாலும்
வளைந்தா லல்லவோ கொஞ்சம் தளர்ந்தாலல்லவோ போ! போ!
(ஆர்வளைப்பார்)

**சல்லியன் திபதை**

அமர்க் களந்தன்னில் வல்லஅரசரே யிதனைப்பாரீர்
நமக்கென்ன போகட்டென்று நானினி யிருக்கமாட்டேன்
நிமைத்திமை விழிக்கா முன்னம் நெடியவில்வளைத்தே யெந்தன்
சமத்தினைக் காட்டாவிட்டால் சல்லினா னாவேனோ! (128)

*தரு : ராகம் தேசியம்*

இதுவெகு பெரிதோ! போ! போ! எனக்கு
இதுவெகு பெரிதோ! போ! போ!
கையிலெடுக் கிறேன் கணைதொடுக் கிறேன் (இது மிக)

தீர்களே யிங்குவாரும் யெந்தன்
திராணியைத் தான் சற்றே பாரும்;
வீரிய புலிபோலிதோ வெற்றி
விளைக்கிறேன் பத்தி வளைக்கிறேன் பாரும் (இதுவெகு)

எல்லாவற்கும் இரும்பு ஆனாலெனக்கிது
சின்ன துரும்பு;
புல்லும் வில்லை வளைத்திதோ நாரி
பூட்டுகிறேன் வீரம்காட்டுகிறேன் பாரும் (இதுவெகு)

மாற்றல ரெல்லாம் பார்க்க - மன்ன
மண்டலீக ரெல்லாம் பார்க்க
கோர்த்துச் சுழலும் யேந்திரமச்சைக்
குறிக்கிறேன் விழத்தெரிக்கிறேன் பாரும்! (129)
(இதுவெகு)

**கவி**

மந்திரகிரி மேருமலையை வளைத்திட் டாலும்
இந்தவில் லைவளைக்க அந்தனாலா காதப்பா!
சுந்தரத் தோளும் சோர்ந்து துடித்துமண்மேல் வீழ்ந்து
நிந்தை வந்தது போதாமல் நெஞ்சமெல்லாம் வலிக்குதையோ!
(130)

**வசனம்**

*ஆ! ஆ! ஆ! ஆ! மந்திரகிரியை வளைக்கலாம். மகாமேருவை வளைத்தாலும் வளைக்கலாம். இந்த*

வில்லை வளைக்க என்னாலாகாது. யிந்த வில்லை வளைக்கப்போய் தோள்களும் சோர்ந்தது. வெக்கென்று தரையிலே விழுந்து யிதனாலே ஒளிதம் வந்ததும் போதாமல் மார்பெல்லாம் உளைக்குதே மிதுதான் கண்டது.

**சராசந்தன் திபதை**

**இந்தவில்லை வளைக்க என்னாலே ஆகாதென்று**
**விந்தைசேர் சபையோர் முன்னேவெட் கமில்லாமல் சொன்னாய்!**
**முந்துறுமன் னரெல்லாம் மூக்கின்மேல் விரல்வைக்க**
**சந்தவில் வளைக்காவிட்டால் சராசந்தனா னாவேனோ! (131)**

*தரு. ராகம் : கலியாணி*

போ! போ! யீதெல்லாம் எனக்கொரு
பொருட்டோ!
வில்லை வளைக்கிறேன் - அந்த
லக்கை துளைக்கிறேன்; பாரும் அட (போ! போ!)

திப்போ அடர்ந்தொரு நொடிக்குள்ளே! மச்சை
யிப்போ பறந்திட அடிக்கிறேன்! அட (போ! போ!)

வில்லாயிது வளையா தென்பதொரு
சொல்லா! வளைக்க வொண்ணா கல்லா
வளைக்கா விடிலாண் பிள்ளையல்லா - எல்லாரும்
நடுக்கமெடுக்க ஒருபுல்லா எடுத்து வளைப்பண்டா!
(போ! போ!)

சுண்டுவிர லத்தனையுண்டு ஆனாலுமிதைக்
கண்டுபோ கலாமோ பயங்கொண்டு துண்டாய்
முறிக்குறேன் நெறிக்குறேன் மச்சையிரண்டாய்
குறிக்குறேன் தெறிக்குறேன் னடா! (போ! போ!)

சிலையா அல்லாமல் மேருமலையா நாமறிந்தது
கலையா முகத்தில் மீசை யிலையா!
யிலைபோ லெடுக்கிறேன் முடுக்குறேன் தோள்
வலியால் தொடுக்குறேன் விடுக்கிறேன் அட! (132)
(போ! போ!)

**திபதை**

கனக்கவே யெழுந்திருந்து தருவிமீசையை முறுக்கி
தொனிக்கவே கொக்கரித்து தோள்களும் தொடையும் தட்டி
உனக்கெனக் கென்றுவாரீர்! ஒருவரும் வளைக்கமாட்டார்
எனக்கடங் காதபோதே யார்க்கினி யடங்குமப்பா! (133)

**வசனம்**

*ஆ! ஆ! ராசாக்களே துணிச்சலாய் எழுந்திருந்து கருவிக்கொண்டு மீசையை முறுக்கிக்கொண்டு கொக்கரித்துக் கொண்டு உனக்கெனக்கென்று மேல்விழுந்து வர வேண்டாம்; ஏனென்றால் நீங்களொருவரும் வளைக்க மாட்டீர்கள்! எப்போ எனக்கடங்காமல் போச்சுதோ! யினியார்க்கு அடங்கப்போகிறது வேண்டாம் நில்லுங்கோள்! நில்லுங்கோள்!*

**மரகதமன்னன் தரு ராகம்! காம்போதி**

இதுதானோ யாருக்கும் அடங்காத பெரியவில்
யிதுக்குத்தானா நீர்தானிப்படி சொன்ன சொல்!
இதனை எடுத்து வளைப்பதோ பாரம்
என்ன சொல்லுவேனுந்த னிணையில்லா வீரம்! (இதுதானா)

அணுவைக் கண்டுசிங்கம் யிடையுமா - சர
கதனைக் கண்டு புலியிடையுமா!
கணவன் திறமையதிற் காணவேணு மென்று
காக்கின்ற துரோபதை கைகொட்டி நகையாளா! (இதுதானா)

துரும்புக்கு யானைபின் வாங்குமோ - செத்த
சுள்ளிக்கு ரிஷபம் பின்தாங்குமோ
விரும்புமச் சினன்சேதியிற் பார்ப்போமென் றெண்ணி
யிருக்குந் துஷ்டதூய்மன் ஏளிதம் செய்யானோ! (இதுதானா)

சரகைக் கண்டு தணலோடு மராயிந்த
தனுசைக் கண்டு சிந்தை வாடுமோ!
மருமகனிவன் தானாயிவன் தானாவென் றெண்ணி
மன்னவன் பாஞ்சாலன் மனதுக்குள் மதிப்பான! (இதுதானா)
(134)

**திபதை**

எழுவென்றா லொடியுமற்ற யிரும்பென்றால் வளையும்நல்ல
கழுவென்றால் முறியும்பொல்லா கல்லென்றால் பிளக்குமய்யா

தழுவும்தெல்ல மல்லாதனித்த வில்லெனப் பேரிட்டு
தொழுதகு பாஞ்சாலன்தான் தூமகேதுவையும் வைத்தான்!
(135)

**வசனம்**

*கேளுங்கள் ராசாக்களே! யிந்த வில்யெகுவானா லொடியாதா! யிரும்பானால் வளையாதா! மரமானால் முறியாதா! கல்லானால் பிளக்காதா! இதுகளெல்லாமல்லா சருவசங்காரம் பண்ணும் பூதமாகிய தூமகேதுவை வில்லென்று பேரிட்டு யிங்கே கொண்டுவந்து வைத்தார். இதுவல்லவா! யிதுவல்லா! யிதுவல்லா!*

**நீலராசன் திபதை**

மரகத மன்னா நீதான் வலுமைகள் மெத்தப்பேசி
வேகமாய் வளைத்துப் பார்த்து வில்லல்ல வென்றுசொன்னாய்!
வாகுசேர் நீலராசன் வளைத்தா னென்றந்த மாது
தாகமாய் மோகம்கொள்ள சமத்தைக் காண்பிப்பேன் பாராய்!
(136)

**வசனம்**

ஓ! ஓ! மகா தேசாதிபதி நீ வலுமையெல்லாம் பேசி வில்லை வளைக்கயிலே ஆகாமல் அந்த வில்லினாலே மொத்துண்டு அப்பா வில்லல்ல ஏதோ ஒரு தூமகேது

வென்றல்லவோ சொன்னாய். நீலன் இவ்வில்லை வளைத்தானென்று துரோபதை என்பேரிலே மோகம் கொள்ளும்படியாய் என் சமத்தையிந்த சபையிலே காண்பிக்கிறேன் பாரும்.

தரு. ராகம்: சங்கராபரணம்

இந்தவில்லை வளைக்காமல் விடுவேனா!
ஒருநிமைக் குள்ளேமன்னா் சபைக்குள்ளே! (இந்தவில்)

எல்லாவருங் கண்டுஓங்கி முட்டிக்கொள்ள
ஏந்திழை யாசைப் பட்டென்னைக் கட்டிக்கொள்ள (இந்தவில்)

பீத்த வில்லுக்கு தோத்தா னென்றெனா
போச்சோ அட போ! போ! என்
புசபெல வீரியவலுமை யும்தப்பிப் போச்சோ!
ஏற்றமா மிந்த வில்லை கணத்தினில்
எடுக்கிறேன் முடுக்கிறேன்
தொடுக்கிறேன் விடுக்கிறேன் (இந்த வில்)

செதோயிருந் தாடுதாய்கொடு சூத்திரம்
நானினைத் தேனா னால்
யிதுகளெல் லாமெந்தனுக் கெம்மாத்திரம்
தீரதர வடவாக்கினி போல கோபம்
செனித்திட தொனித்திட தனித்தே குனிக்கிறேன்!
(இந்தவில்)

சொத்த விற்கித்தனை பெலமா - யிதையறிவோம்
யிதற்கென்று வந்து யிளைத்தால் நமக்கு
யேளனம் யெண்ணாள் துரோபதை மெச்சிக்கொள்ள
வளைக்குறேன் தளைக்குறேன் பிளக்குறேன் துளக்குறேன்
(வில்லை) 137

**திபதை**

தூமகேதுவையும் வெல்வேன்! சுத்தவீரரையும் வெல்வேன்!
எமதூதரையும் வெல்வேன்! எமனையு வெல்வேனிந்த
பூமியில்வலிமை பெற்ற பொருள்களை யெல்லாம் வெல்வேன்!
தீமையா மிதனை வெல்ல சிவனாலு மாகாதப்பா (138)

**வசனம்**

கேளுமப்பா கததேசாதிபதி யிதுவில்லல்லா பொல்லா தூமகேது வென்றல்ல வோ சொன்னீர்; அந்த தூமகேதுவையும் வெல்வேன். சுத்த வீரரையும் வெல்வேன். எமனையும் வெல்லுவேன். யிந்த பூமியில் வலிமைபெற்றது யெதுவோ அதுகிறயெல்லாம் வெல்லுவேன். இந்த வில்லை வெல்லுதற்கு என்னாலே ஆகாது. என்னாலே மாத்திரமா ஆகாது. சிவனாலேயும் ஆகாது.

**துரியோதரன் சொல்லுகிற விருத்தம்**

எத்தனை பேர் தோற்றாலும் கெலித்திட் டாலும்
யிகட்சியென்ன புகட்சியென்ன யீன மென்ன

சுத்தமிகு சகக்கிரேசன் ராச ராசன்
துரைதுரியோ தனன்கூடத் தோற்றா னென்றால்
சத்துரர்மி கநகைப்பார் நகைத்திட் டாலும்
தையல்துரோ பதைநகைப்பா லப்பா லெந்தன்
வித்தையென்ன வீரமென்ன மேன்மை யென்ன
விரல்துரியோ தரனெனயான் மேவு வேனோ; (139)

**வசனம்**

*கேளுங்கோ ராசக்களே! நீங்களார் தோற்றாலும் கெலித்தாலும் அதிலே யிகழ்ச்சியுமில்லை. இந்தக் கடல் சூழ்ந்த பூமிக்குயெல்லாம் அதிபதியாகிய ராசாதிராசன் துரியோதன மகாராசன் கூட தோற்றுப் போய்விட்டானென்றால் க்ஷத்தியர்கள் (சத்துருக்கள்) எல்லாம் சிரிப்பார்களே: அதினாலேயும் ஒரு தாழ்வில்லை. யிந்தத் துரோபதை குலுக்கென சிரிப்பாளே. அப்பாலே என் வித்தை என்னவாச்சுது. வீரமென்ன வாச்சுது. என்னுடைய மேன்மை என்ன வாச்சுது. பிறகுயிந்த உலகத்திலே துரியோதனென்று நானுமிருக்கலாமா நல்லது இந்தவில்லை நொடிக்குள்ளே வளைத்துப் போடுகிறேன் பாரும்.*

*தரு. ராகம்: சங்கராபரணம்*

நொடிக் குள்ளே வளைக் குறேன் பார் - யிந்தவில்லை
நொடிக் குள்ளே வளைக் குறேன் பார்;

நொடிக் குள்ளே வளைத் தொருயிடிக் குள்ளே முதக்கென்ன
பிடிக் குள்ளே அடிக்குறேன் படிக்குள்ளே புகழ்பெற
(நொடிக்குள்ளே)

மதத்த யானை போலெழுந்தீர் - வில்லுடன் கூட
மல்லுக் கட்டிக் கீழே விழுந்தீர்
கதித்த அக்கினி போல கொதித்த உக்கிரமுடனே
மிதித்து வீரசிங்கம் போல் குதித்து செக்கலி கொட்டி
(நொடிக்குள்ளே)

துடுக்காய் சமத்துப்பேசி வில்லடிபட்டு
நடுக்கங் கொண்டீர்கள் சீ! சீ!
முடுக்குடன் மன்னருளர் திடுக்கிட க்ஷணத்தினில்
பொடுக்கென ஒருகையால் சிடுக்கென எடுத்திதோ (நொடி)

ஓடிக்கிற சுள்ளியைக் கண்டு - மிகமிரண்டு
ஓடுவதென்ன பயங்கொண்டு
துடிக்கிறேன் லெக்குவிழ அடிக்கிறேன்
துரோபதை கையை பிடிக்கிறேன்
கலியாணத்தை முடிக்கிறேன் பாருமொரு (நொடி) (140)

## துரியோதனன் சொல்லுகிற விருத்தம்

தையல்துரோ பதைக்கேற்ற புருஷ னானேன்
தனித்தழைத்து எனக்கவளைத் தந்தா னானால்
வை(ய்)யமெல்லா மொருகுடை யிலாளும் வேந்தன்
மருகனென்றா லதைப்போலு மகிமை யுண்டோ!

கையடங்கா யிந்தவில்லை வளைப்பா ரில்லை
யிந்தகன்னிக் குத்தகுமா னகணவ னில்லை
வெய்யபாஞ்சா லன்மகள்த னித்தி ருக்க
விடுத்திட்டான் காரியத்தைக் கெடுத்திட் டானே! (141)

**வசனம்**

அகோ கேட்டீர்களோ ராசாக்களே இந்தத் துரோபதைக்கு செற்ற புருஷன் நானேயல்லாமல் ஒருத்தருமில்லை யிந்த பாஞ்சாலனென்னை அறியானா? அறிந்திருந்தும் மதி மயங்கிப் போய்விட்டான். தனித்து என்னையழைத்து இந்தப் பெண்ணை எனக்கு கொடுத்தானானால் உலகமெல்லாம் ஒருகுடையில்லாளப் பட்ட துரியோதன மகாராசன் பாஞ்சால ராசனுக்கு மருமகனென்று சொல்லுவார்களே! அதுமாத்திரம் போதாதா! அதை விட்டுவிட்டு அடங்காதவில்லைக் கொண்டு வந்து வைத்தான். ஆகையாலே யிதை வளைக்கப்பட்டபேர் ஒருத்தருமில்லை. அந்தப் பெண்ணுக்குத் தக்க புருஷனுமில்லை. அநியாயமாய் தான்பெற்ற பெண்ணுக்கு புருஷனில்லாமயிருக்கும்படிச் செய்து தனக்குமொரு கீர்த்தியும் இல்லாமல் செய்து கொண்டான். பார்த்தீர்களா! ராசாக்களே!

**கர்னன் சொல்லுகிற திபதை**

வளைக்க மாட்டாம லெல்லாம் வல்லமை பேசிப்பேசி
இளைத்தது கண்டிருந்தும் யேன்சும்மா பேசவேணும்
முளைத்திடு முளையில் மூன்று லோகமும் பூசை கொண்ட
விளைத்த விற்கர்னன் நானும் வில்வலி பேசுவேனோ! (142)

**வசனம்**

*வில்லை வளைக்கமாட்டாத பேரெல்லாம் தாங்கள் தங்கள் வல்லமையைப் பேசிப்பேசி தோற்றுப்போனது கண்ணாலே கண்டிருந்தும் விருதாவிலே ஏன் பேசவேண்டும்? முளைக்கத்தானே மூன்று லோகமும் பூசைகொண்ட கர்னனென்று எல்லாரும் அறிவார்கள். நானும் யிந்தவில்லை ஒரு பொருட்டாய்ப் பேசலாமோ? ஏன் பேச வேண்டும்?*

*தரு: ராகம் உசேரி*

இந்தவில்லை வளைக்காமல் போவேனோ?
பாரும்! பாரும்! யெந்திராணியை
இந்தவில்லை வளைக்காமல் போவேனோ!
இந்தவில்லைப் பற்றி வளைப்பேன் - மச்ச
யெந்திரத்தைக் கூட துளைப்பேன்
வந்த அரசர்கள் வளைக்காமல் போனாலும்
எந்தன் சமர்த்தாலே எப்படியானாலும்! (இந்த வில்லை)

வரமோ! மகமேருவைப் பார்க்கிலும் உரமோ?
கொற்றத் துடனமர் முற்றும் கெலித்திட
வெற்றிப் படைமன்னர் சித்தம் சலித்திட (இந்த வில்லை)

காத்திரம் எம்மாத்திரம் தான் பேத்துதோ
நல்ல தாகட்டு மென்ராச கோத்திரமும்தனு
சாஸ்திரமும் பொய்த்துதோ! பார்த்தபேர்
சின்னமாய் சொல்லவோ - வந்து
தோத்(ற்)துப் போனால் வசையல்லவோ
மாற்றலர் நம்மை மதிப்பாரோ ஒருவேளை
ஏற்றதுரோபதை என்சொல்லுவாள் நாளை! (இந்த வில்லை)

வளைத்து வில்லுக்கொரு மச்சையொரு கேடா -
ஆனாலுமிருக்கட்டும்
மெச்சுவ தேனிது கொச்சை எனக்கீடோ
வச்சிர மாலையானாலும் மிந்த முச்சகம்
விட்டப்பால் போனாலும் பச்சை
புரவிக் கெதிரோன் மகனென்றும்
உச்சித சிங்கம்போற் கெர்ச்சித்தெதிர் நின்று
(இந்தவில்லை)

**திபதை**

மூவரும் வளைக்க மாட்டார் முப்பத்து முக்கோடி
தேவரும் வளைக்க மாட்டார் செகத்தினில் பிறந்த போர்கள்
யாவரும் வளைக்க மாட்டார் யினியித்தை வளைத்தே யிந்த
பாவை கைக்கொள் வாரில்லை பாஞ்சால னென்ன செய்வான்!
(144)

**வசனம்**

ஆனாலும் இந்த வில்லை மும்மூர்த்திகளும் வளைக்கமாட்டார். பூமியில் பிறந்த பேரும் வளைக்க மாட்டார். யினியிந்த வில்லை வளைத்துத் துரோபதையை யார் மாலையிடப் போகிறார்கள் பார்த்தீர்களோ ராசாக்களே.

பிராமண வேஷங்கொண்டிருந்த அர்ச்சுனன்

**துஷ்டதூய்மனைப் பார்த்துச் சொல்லுகிற திபதை**

**துன்னிய துஷ்டத் தூய்மா சுழல்மச்சயெந்திரம் வீழ**
**மன்னவர் வளைத்தெய்தால் மாலை சூடுவதல்லாமல்**
**யின்னில மறையோர் மச்சயெந்திரம் விழவேயெய்தால்**
**சொன்ன துரோபதை தான்மாலை சூடுவதுண்டோ சொல்வாய்!**
(145)

**வசனம்**

அகோ கேளுந் துஷ்ட தூய்ம மகாராசவே! ராசாக்களாகப் பிறந்தோர் மாத்திரமே யிந்தவில்லை வளைத்து மச்சயெந்திரம் விழத் தள்ளினால் யிந்தப்பெண் மாலை சூடுவதல்லாமல் பிராமணாளாய்ப் பிறந்தபேர் அந்த மச்சயெந்திரத்தை விழத் தள்ளினால் அவனுக்கு யிந்தத் துரோபதை மாலை சூடுகிறதுண்டா. அது தெரியச் சொல்லுங்காணும்.

### துஷ்டதுாய்மன் சொல்லுகிற திபதை

நிலத்தினி லெவரானாலும் நெடியவில் வளைத்த பேர்க்கு
சொலத்தகு மன்றல்மாலை தோகை சூடுவ தானாலும்
குலத்தினு முயர்ந்து யிந்தகொடிய வில்வளைக் கத்தக்க
பெலத்தினு முயர்ந்தோ ரானால் பின்னும் நல்லதுதானய்யா
(146)

### வசனம்

*கேளும் ஐயா! ஒய் பிராமணரே யாரானாலும் வில்வளைத்து அந்த மச்சயெந்திரம் விழத் தள்ளினவர்க்கு துரோபதை மாலை சூடுகிறதுதான். அதிலேயும் நீங்கள் உயர்ந்த குலத்திலேயும் பிறந்து யிந்தவில்லை வளைத்து யெய்தித் தக்க பலத்திலேயு முயர்ந்திருந்தால் பின்னையு மகாயோக்கியந்தான் பிராமணரே.*

### பிராமணனான அர்ச்சுனன் சொல்லுகிற தரு

இந்த ஏழைப் பார்ப்பான் வறுமையைச் சற்றே
எல்லோரும் கண்ணாலே பாருங்கோள்!
கூழை மச்சயெந்திரம் துளைக்கிறேன்!
அண்ட கோளத்தையும் கெல்லி பிளக்கிறேன்! (இந்த ஏழை)

ஆனை முழுங்குகிற அம்மையாருக் கொரு
பூனை சுண்டாங்கி யல்லவா!
அக்கினியைத் தின்னு கக்குகிறப் பிள்ளைக்கு
அல்லித் தண்டொப் பாகச் சொல்லவோ!

வானுற சக்கரமச்சையப் போக்குவேன்
மேலிட்ட நட்சத்திரத்தையும் தாக்குவேன்! (இந்த ஏழை)

அண்டத்தில் கையில் வைத்தாட்டும் பிடாரிக்கு
சுண்டைக்காய் மெத்தவும் பாரமோ!
அலைகடல் தன்னைக் குடிக்கும் வடவைக்கு
யிலகும் பனித்துளி நேரமோ!
கண்டித் தெதிர்த்திடல் கொண்டத்தை வாட்டுவேன்
கண்டப் பிரகண்ட உத்தண்டத்தை வாட்டுவேன்! (147)
(ஏழைபார்ப்பான்)

**பாடகர் சொல்லுகிற விருத்தம்**

பங்கயக்கண் தாதியர்கள் திங்கள் தோறும்
படமெழுதிக் காட்டினமுன் பான்மை போல
தூங்கமிகு மதிமுகமு மார்புந் தோளும்
துளைக்கரமும் யிருதாளும் துளங்கப் பார்த்து
இங்கிதமாம் பாண்டவர்க ளைந்து பேரில்
எழில்மிகுந்த வில்விசைய னிவனே யென்று
நங்கைதுரோ பதைதனது நெஞ்சி லன்பு
நாட்டினான் மணமாலை சூட்டி னானே! (148)

**பொதுவசனம்**

இந்தப்படிக்கு பிராமண வேஷங் கொண்டிருக்கிற அர்ச்சுனன்
வில்லை வளைத்து மச்சயெந்திரத்தை விழயெய்து
துரோபதையை மற்ற சகோதராள் நாலுபேரையும் யிட்டுக்

கொண்டு அப்புறம் போகும்படியாய் நடக்க துரியோதனன் சகலராசாக்களையும் பார்த்துச் சொல்லுகிற விதங்காண்க.

**திபதை**

தீதிலா ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களே கேளீர்
வேதியன் ஒருவன் வந்து மெல்லியைக் கொண்டு போக
கோதறு மிஞ்சித்தின்ற குரங்குபோல் பார்த்திருந்தால்
நீதியோ உலகில்நம்மை நிருபரென் றெண்ணுவாறோ! (149)

**வசனம்**

*கேளுங்கோள் ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களே! விரலத்தனையுண்டு ஒரு பார்ப்பான் வந்து யித்தனை பேரையு மதியாமல் அந்தத் துரோபதையை யிட்டுக்கொண்டு போகும் படியாயப் பார்த்திருந்தீர்களானால் உலகத்தில் நம்மை யாராகிலும் ஒரு துரும்புக்கு மதிப்பார்களா; நாம் க்ஷத்திரியர் தானா. பளா! பளா! நல்ல காரியம் செய்தீர்கள் ராசாக்களே!*

**ராசாக்கள் சொல்லுகிற திபதை**

உரைத்த சொல்மெய் தானய்யா ஒருநொடிக்குள்ளே யிந்த
தரித்திரப் பார்ப்பான் திரேகம் சல்லடைக் கண்களாக
பொருந்திய கணையா லெய்து பொற்கொடி தனைவிட்டேக்
கருத்துடன் வென்றேயந்த கன்னியைக் கொள்வோம் பாராய்!
(150)

**வசனம்**

அகோ மெய்தனாய்யா! துரியோதன மகாராசனே! இந்த க்ஷணத்திலே அந்தப் பார்ப்பானிட திரேகமெல்லாம் சல்லடைக் கண்களாக எங்கள் கைஅம்பாலே துளைத்து அந்தத் துரோபதையை விட்டு ஓடும்படியாய் அடித்து அந்தப் பெண்ணை மீட்டுக் கொள்ளுகிறோம் பாரும் ஐயா.

**அப்போ வந்திருந்த பிராமணாள் சொல்லுகிற திபதை**

அன்னுடா சேஷா சுப்பாயிவளா யியையோதி மக்கள்
பன்னுநம் மினத்துப் பார்ப்பான் பாவையைக் கொண்டுபோனால்
நின்னுற வெறுமை சும்மா நேக்கென்ன வென்றிராமல்
கொன்றிட வெழுந்திருந்தார் நாமும் குடுமியைத் தட்டிக்
கொள்வோம்! (151)

**வசனம்**

அன்னுடா சேஷா சுப்பா யிவளாயியை ஒழி பிள்ளைகளைப் பார்த்தாயா! யேதோகேளும் நம்மிட குலத்திலே ஒரு பிராமணன் கெட்டிக்காரனாயிருந்து அந்தப் பெண்ணைக் கொண்டு போனால் நமக்கென்ன வென்று வெறுமையிராமல் அந்த ஏழைப் பிராமணனைக் கொன்றுபோட நினைக்கலாமா! அந்தத் தேவடியாள் பிள்ளைகளப்படி நினைத்தாலும் நாமும் அப்படி சும்மா

பார்த்திருக்கலாமா! குடுமியைத் தட்டிக்கொண்டு புறப்படுங்கோள்.

**தரு**

சுப்பா சேஷா வாதா கிருஷ்ணா சுருக்கா புறப்படுங்கோ
ளப்பா வையங்காரே நீங்களனைவரும் வாருங்கோள்!
கூழை வில்லை வளைக்க மாட்டாமல் குப்புற வீழ்ந்தார்க்ள நம்மிட
ஏழைப் பிராமணன் மேலே சண்டைக்கெப்படி வருவார்கள்!
வில்லை வளைத்தவன் கொண்டுபோனால்
வெறுமேயிருக்காமல் யிப்ப
வல்லவனென்று சண்டை தொடுக்க வந்தார்கள் கேளும்!
அறுத்த தேவடியாள் பிள்ளைகளை அடிப்போம் வாருங்கோ!
விருத்த கிழவன் நானே போதும் என்வீரம் பாருங்கோ!
திருப்பு கூடை கீழேவைத்து சிகையை முடியுங்கோள்
பருப்புஞ் சோறும் செரித்திட வேணும் பார்த்திருவோ மொருகை
தட்டுச் சம்பா தாள்போல வாரி தரையிலடிப்போமோ
கட்டிப் பிடித்துக் கீழே தள்ளிக் கழுத்தை ஒடிப்போமோ!
சித்திரவில்லும் அஸ்திரமென்கைக் குத்துக் கிணையாமோ!
கத்தியும் வாளும் பத்தியவேலும் குத்துமிபோல் நெறிப்போம்!

## பிராமண வேடங்கொண்டிருக்கும் அர்ச்சுனன் மற்ற பிராமணாளுக்குச் சொல்லுகிற திபதை

வெறுக்கும் வேதியரே நீங்கள் விலகிப்பா லிருங்கோள்
நிறுத்திலா வேந்தரோடே நீங்களே னெதிர்க்க வேணும்

கறுக்கவென் கையம்பாலே காத்தினிலிலவம் பஞ்சிப்
பறக்கவே அடிப்பேன் சற்றே பதறாமல் பாத்திருங்கோள்! (152)

**வசனம்**

*நமஸ்காரம் நமஸ்காரம் ஐயா பிராமணர்களே! அந்த ராசாக்களுடனே நீங்கள் ஏன் எதிர்க்க வேண்டும். என்னுடைய கணைகளாலே பெருங்காற்றிலிலவம் பஞ்சாய் ஓடிப்போக அடிக்கிறேன். நீங்கள் ஒரு பக்கமாகயிருந்து பார்த்துக் கொண்டிருங்கோ ளய்யாமாரே!*

**பிராமணனான அர்ச்சுனன் துரோபதைக்குச் சொல்லுகிற திபதை**

வெய்யவில் வளைக்கமாட்டா வேந்தெரெல் லாருங்கூடிச்
செய்யுமோர் உன்னைக் கொள்ள கெடுத்தியே வந்திப்போ
செய்யுமிங்கிவர் தன்கையும் திறமையும் சற்றே பார்ப்போம்
நொய்யென நோங்கயிந்த நொடிக்குள்ளே அடித்துவாரேன்
தையலுக் கரசே யெந்தன் தமையன் முன் சற்றே நிற்பாய்!(153)

**வசனம்**

*கேளாய் பெண்ணே துரோபதையே வில்லை வளைக்க மாட்டாத ராசாக்களெல்லாம் என்னுடனே சண்டைசெய்து உன்னை மீட்டுக் கொள்ளப் போகிறார்களாம். அவர்களுடைய திறமையைச் சற்றே*

பார்ப்போம். நீ என்னிட தமையன் பின்னாலே சற்றே நின்றாயானால் ஒரு நொடிக்குள்ளே அடித்து விடுகிறேன்.

**வீமன் திபதை**

அண்ணாவே தம்பிமாரே அரிவை துரோபதையை நீங்கள்
கண்ணாகப் பார்த்திருங்கோள் கருகிவந்தெதிர்க்கு மிந்த
எண்ணதெ மன்னர் தம்மையிரண்டு கையாலும் வாரி
மண்ணோடே மோதி மோதி மாய்ந்திதோ வருகுவேன் (154)

**வசனம்**

என்னுடைய அண்ணாவே தம்பிமாரே யிந்தத் துரோபததையைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொண்டு யிருங்கோள் யிப்போ சண்டைக்காக கும்பலாய் வருகிற ராசாக்களை சம்பாத்தாள் போல வாரி வாரி அடித்து ஒரு நிமிஷத்திலே வருகிறேன்.

**ராசாக்களும் பிராமணனான அர்ச்சுனனும் சொல்லி ஆடுகிற தரு**

ஆரடா பிராமணா! நில்லு நில்லு உந்தன்
ஆண்மையைச் சற்றே பார்ப்போம் - ஒரு
காராட்டமாகவே வில்லை வளைத்தந்த
கன்னியைக் கொண்டு போவதோ!

வீரவில்லை வளைத்து மெல்லியைக் கொள்ளாமல்
வெட்கம் சிக்கங் கெட்டுப் போனீரேஇப்
பாரிலொருவற்கும் பாரியான பின்பு
பவுஷீ வந்ததென்ன மன்னரே!
பவுஷென்றுங் கிவுஷென்றும் பதட்டமாய்ப் பேசாதே
பார்ப்பானென்று சொல்லி விடுவமோ
உயிர்தவிர உன்னுடம் பெல்லாஞ் சல்லடைக்
கண்ணாக்கி தையலைக் கொள்வோம் பிராமணா!

தையலைக் கொள்ளும் சவுரியமெல்லாம்
சபையிலனைவரும் பார்த்தாமா - யிந்த
ஒய்யாரமேன் சும்மா உயிருடனே தப்பி
ஓடிப்போங் களடா மன்னரே!

ஓடிப்போங் களென்று நீயார் சொல்வதடா
உந்தனுக் கித்தனை கெருவம்மா - யிந்த
ஒருகணை யாலுன்னைச் சின்னாபின்னமாக
ஓடவிட்டிருக்கிறோம் பிராமணா நீ அடா!

அடிக்கிற சமத்தெல்லாம் நொடிக்கி - வில்லண்டை
அருகிலிருந்து நான் பார்த்தேன் பற்றி
கடிக்கின்ற நாய்சும்மா குரைக்காதென்று பழங்
கதைகேட் டதில்லையே மன்னரே (155)

கதிக்கப் பிச்சையெடுத்து உதிக்கத்தின்று கொழுத்து
ததிக்கு வில்வளைத்தால் குதிக்கிறாய் பற்றி

கதைக்காமல் உன்னைக் கொட்டி வதைக்காமல் பள்ளம்
வெட்டிப் புதைக்காமல் விடுவமோ பிராமணா!

**பாடகர் சொல்லுகிற பொது விருத்தம்**

விசையன்கர் னனைவென் றான்போர்
வீமன் சல்லியனை வென்றான்
திசையுறு மன்ன ரெல்லாம்
சின்ன பின்னங் களாகி
துசமிகு பார்ப்பா ரோடே
தோற்றா லும்வென் றிட்டாலும்
வசையெ ன வெண்ணித் தங்கள்
மானகர்க் கெய்தி னாரே! (156)

**முற்றும்**

*துரோபதை மாலையிடு நாடகம் முற்றிற்று.*

*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

# பாடற் முதற்குறிப்பு அகராதி

## அ


| | | |
|---|---|---|
| 1. | அக்கினி | 68 |
| 2. | அசுவத்தாமா | 76 |
| 3. | அடங்கா | 53 |
| 4. | அடிக்கடி | 43 |
| 5. | அண்ணலே | 24 |
| 6. | அண்ணல்பாஞ் | 76 |
| 7. | அண்ணாவே | 154 |
| 8. | அந்தணர் | 73 |
| 9. | அப்படித்தானே | 38 |
| 10. | அமைனறு | 112 |
| 11. | அரக்குமாளிகை | 20 |
| 12. | அரக்குமாளிகை | 21 |
| 13. | அரக்குமாளிகை | 34 |
| 14. | அரிவை துரோபதை | 59 |
| 15. | அன்றுவந் | 79 |
| 16. | அன்னுடா | 151 |


## ஆ


| | | |
|---|---|---|
| 17. | ஆதிமால் | 4 |
| 18. | ஆர்வளைப்பார் | 127 |
| 19. | ஆரடா | 10 |
| 20. | ஆரடா | 50 |
| 21. | ஆரடாபிராமணா | 155 |
| 22. | ஆனைகளை | 55 |

இ

| | | |
|---|---|---|
| 23. | இதுதானா | 134 |
| 24. | இதுவெகு | 129 |
| 25. | இந்த ஏழை | 147 |
| 26. | இந்தவில் | 131 |
| 27. | இந்தவில் | 143 |
| 28. | இந்தவில் | 143 |

உ

| | | |
|---|---|---|
| 29. | உரைத்த | 150 |
| 30. | உள்ளுமாய் | 3 |

எ

| | | |
|---|---|---|
| 31. | எங்களை | 107 |
| 32. | எட்சணி | 25 |
| 33. | எத்தனை | 139 |
| 34. | எப்படி | 102 |
| 35. | எல்லை | 25 |
| 36. | எழுவென்ற | 135 |
| 37. | என்னுயிர் | 60 |

ஐ

| | | |
|---|---|---|
| 38. | ஐயரே | 26 |
| 39. | ஐவரும் | 23 |

ஓ

| | | |
|---|---|---|
| 40. | ஓட்டம்மாயோடி | 104 |

க

| | | |
|---|---|---|
| 41. | கண்டமரத் | 123 |
| 42. | கண்டர்தம்மை | 56 |

| | | |
|---|---|---|
| 43. | கண்ணினுண் | 69 |
| 44. | கண்மணியான | 48 |
| 45. | கபடவஞ் | 19 |
| 46. | கர்னராசன் | 95 |
| 47. | கன்றுபோம் | 81 |
| 48. | கன்னிதுரோபதை | 83 |
| 49. | கனக்கவே | 133 |
| 50. | கனங்க | 28 |
| 51. | காதள | 119 |
| 52. | காரியந் | 51 |
| 53. | குவிந்த | 32 |
| 54. | கோபால | 99 |

ச

| | | |
|---|---|---|
| 55. | சகுனிவந்தானே | 94 |
| 56. | சத்திரமதனில் | 105 |
| 57. | சத்துரு | 80 |
| 58. | சபதமு | 27 |
| 59. | சராசந்தன் | 89 |
| 60. | சல்லியன் | 97 |
| 61. | சிசுபாலன் | 90 |
| 62. | சித்தர | 67 |
| 63. | சீரெல்லாம் | 15 |
| 64. | சுப்பா | 152 |
| 65. | சூரத்துரோ | 17 |
| 66. | செயமிகுந்த | 151 |
| 67. | சேரன் | 91 |
| 68. | சேனாதிபதி | 53 |

| | | |
|---|---|---|
| 69. | சேனைக் | 49 |
| 70. | சோழராசன் | 92 |
| | **த** | |
| 71. | தக்கபாஞ் | 100 |
| 72. | தஞ்சமென்றே | 22 |
| 73. | தண்ணா | 114 |
| 74. | தருமமும் | 31 |
| 75. | தவமுனி | 29 |
| 76. | தாட்சியொன் | 58 |
| 77. | தாதிய | 120 |
| 78. | திருமணி | 12 |
| 79. | திறப்படும் | 54 |
| 80. | தீதிலா | 72 |
| 81. | தீதிலா | 149 |
| 82. | துதிபெறு | 75 |
| 83. | துதிபெறு | 117 |
| 84. | துய்யரே | 11 |
| 85. | துரைமக்க | 93 |
| 86. | துன்னிய | 145 |
| 87. | தூமகேது | 138 |
| 88. | தேசனே | 8 |
| 89. | தேசாதிபர் | 85 |
| 90. | தையல் | 141 |
| 91. | தையலே | 62 |
| 92. | தொந்திக் | 6 |
| 93. | தோகை | 61 |
| 94. | தோற்றிய | 41 |

நு

| | | |
|---|---|---|
| 95. | நல்லது | 122 |
| 96. | நவரச | 118 |
| 97. | நாட்டினி | 66 |
| 98. | நாதனே | 30 |
| 99. | நிலத்தினி | 146 |
| 100. | நிலையுட | 40 |
| 101. | நீலன் | 86 |
| 102. | நொடிக் | 140 |

ப

| | | |
|---|---|---|
| 103. | பகதத்தன் | 88 |
| 104. | பங்கமும் | 16 |
| 105. | பங்கயக் | 148 |
| 106. | பதிதனின் | 116 |
| 107. | பரவை | 44 |
| 108. | பலபத்திர | 98 |
| 109. | பல்லோர் | 39 |
| 110. | பாஞ்சால | 6 |
| 111. | பாண்டியராசன் | 92 |
| 112. | பாத்திரமறை | 70 |
| 113. | பிரட்டுக்கு | 46 |
| 114. | புரட்டிப் | 126 |
| 115. | பூவைதுரோபதை | 124 |
| 116. | பொற்கொடி | 101 |
| 117. | போ! போ! | 132 |

ம


| | | |
|---|---|---|
| 118. | மக்களே | 108 |
| 119. | மகததேசாதிபர் | 87 |
| 120. | மங்கையங் | 64 |
| 121. | மங்கை | 115 |
| 122. | மந்திரி | 9 |
| 123. | மந்திரகிரி | 13 |
| 124. | மரகத | 136 |
| 125. | மருவிய | 37 |
| 126. | மல்லடு தளபதி | 52 |
| 127. | மல்லுக்கு | 125 |
| 128. | மலைகடல் | 74 |
| 129. | மன்னவா | 47 |
| 130. | மனதினில் | 18 |
| 131. | மாதரசே | 113 |
| 132. | முறுக்குடன் | 45 |
| 133. | மூவரும் | 144 |
| 134. | மேதினி | 14 |
| 135. | மைந்தனே | 111 |
| 136. | மைப்படி | 63 |


ய


| | | |
|---|---|---|
| 137. | யாத்திரை | 71 |


ர


| | | |
|---|---|---|
| 138. | ராத்திரி | |


வ


| | | |
|---|---|---|
| 139. | வஞ்சனை | 33 |
| 140. | வடகரு | 84 |

| | | |
|---|---|---|
| 141. | வல்லபாண் | 65 |
| 142. | வளைக்க | 142 |
| 143. | விங்கள | 78 |
| 144. | விசையன் | 156 |
| 145. | விதிவசப் | 82 |
| 146. | வில்லிது | 121 |
| 147. | விளைந்த | 42 |
| 148. | வினைவழி | 109 |
| 149. | வாய்வா | 77 |
| 150. | வெய்யவில் | 153 |
| 151. | வெற்றி | 1 |
| 152. | வெற்றிசேர் | 57 |
| 153. | வேதப்பிராமணர் | 13 |
| 154. | வேதமோர் | 7 |
| 155. | வேதமோர் | 36 |
| 156. | வேதியர் | 116 |

## அருஞ்சொற்பொருள் விளக்கம்

| | | |
|---|---|---|
| அனந்தம் | - | அளவின்மை, ஆகாயம், பொன் |
| அளி | - | வண்டு |
| ஆரூடம் | - | ஏறியது, நினைத்ததையுணர்ந்து கூறும் சோதிடம் |
| இங்கிதம் | - | இனிமை, குறிப்பு., கருத்து |
| உத்தரீகம் | - | மேற்பார்வை |
| உம்பருலகு | - | வானுலகு |
| களரி | - | களர்நிலம், காடு, போர்க்களம், கூத்தாடுமிடம் |
| சிலாக்கியன் | - | மெச்சத்தக்கவன் |
| நிமித்தம் | - | காரணம், சகுனம், அடையாளம் |
| பரிபாலனம் | - | பாதுகாப்பு |
| பாணிக்கிரகணம் | - | கைப்பற்றுதல், கலியாணம் |
| பிடாரி | - | காளி |
| புவனி | - | உலகம் |
| பொக்கிஷம் | - | சேமித்துவைத்த திரவியம் |
| விபவம் | - | பெருமை, வாழ்வு |

# சுட்டி


## அ

அக்கினி
அங்குசபாசம்
அசுவத்தாமா
அஞ்சலி
அட்டகெசம்
அடல்
அடியவர்கள்
அடியேன்
அண்ணலே
அணு
அந்தாழ்
அந்தரம்
அமர்க்களம்
அர்ச்சுனன்
அரக்குமாளிகை
அரசன்
அரவக்கொடி
அரனிரு
அரிவை
அரை
அருமை
அலகை
அவமதி
அவனி
அவை
அளியினம்
அற்புதமாக
அன்பு
அன்னம்
அனந்தம்
அஸ்தினாபுரம்

## ஆ

ஆசீர்வாதம்
ஆசை
ஆட்சி
ஆத்துமணர்
ஆதித்தன்
ஆதிமால்
ஆதிமூர்த்தி
ஆயிரப்பிரட்டன்
ஆரியர்

ஆரூடபாலன்
ஆலாத்தி
ஆள்வோன்
ஆனைகள்
ஆனைமுழங்கி
ஆஸ்தான

**இ**

இங்கிதம்
இணக்கம்
இத்தரை
இந்திரன்
இரக்கம்
இரண்டாயிரப் பிரிட்டன்
இரவொடு
இருநிலம்
இரும்புல்க்கை
இலகுபுகழ்
இலகும்
இளைத்து
இன்னிலம்

**ஈ**

ஈரேழுபதினாலு லோகம்

**உ**

உக்கிரவேங்கை
உத்தண்டசாமி
உத்தமனே
உத்தரீகம்
உம்பருலகு
உளஞ்செறி

**ஊ**

ஊமத்தங்காய்

**எ**

எகுவில்
எச்சரிக்கை
எண்டிசை
எந்திரமச்சை
எமதூதர்
எமன்
என்னுயிர்

**ஐ**

ஐயரே
ஐவரும்

**க**

கடலென
கடிகையர்

கண்மணி
கணக்கப்பிள்ளை
கணக்கன், கணபதி
கணவன்
கபடவஞ்சகம்
கமலம்
கயிலை
கயிற்றை
கர்னன்
கருங்குழல்
கருங்கொண்டை
கருணீகா
கருத்தினில்
கரும்பு
கலகப்பிரியன்
கலியாணம்
கலைமகள்
கவலை
களங்கம்
களரி
கன்னி
கனி
காக்கும்
காசி
காதல்
காளை
கிடக்குதே
கிரீடம்
கிருஷ்ணன்
கிழங்கு
கீர்த்திபர்
கீரிப்பிள்ளை
குடகரு
குடிக்கு
குடிக்கு
குடுமி
குணலோலன்
குந்திதேவி
குமாரத்தி
குலம்
குலாலன்
குவிந்த
குளிர்செந்தாமரை
குன்றே
கூரெழுத்தாணி
கூருற்ற
கூழுக்கு
கெண்டை

கெலிப்பு
கேளாய்
கொங்கை
கொம்பது
கொலு
கொற்ற
கோதிலா
கோபால
கோமான்
கோலினிலகு
கோவே

**ச**

சகுனி
சங்கராபரணம்
சஞ்சலம்
சத்தியம்
சத்துரர்
சதுர்மறை
சந்திரவம்சம்
சபதம்
சபாமண்டபம்
சரணம்
சரஸ்வதி
சல்லியன்
சிங்கம்
சிங்களபதி
சிசுபாலன்
சித்திரமயில்
சிரஞ்சீவி
சிலவு
சிலாக்கியன்
சிலை
சிவன்
சீலன்
சுகுந்த
சுந்தரமாய்
சுப்பா
சுபகாரம்
சுயம்வரம்
சூது
சூரன்
செங்கண்மால்
செந்தழல்
செந்துரு
செவிக்கும்
சேர்வைக்காரன்

சேரன்
சேல்விழி
சேனாதிப
சேஷா
சொற்பிரசங்கன்
சோதிடம்
சோழன்

ஞ

ஞானக்கொழுந்த
ஞானம்

த

தங்கக்கடகம்
தட்சணை
தவில்
தன்மை
தனஞ்சியன்
தாது
தாஷ்டிகர்
திராணி
திருமணி
திலதம்
தீரன்
துங்கன்
துங்கவில்
துடி
தும்பல்
துரும்பு
துரியோதனன்
துரோணன்
துரோபதை
துஷ்டதூய்மன்
தூமகேது
தெய்வானை
தேசனே
தேசதேசாதிபர்
தேவடியாள்
தேவர்
தையல்
தொந்தி
தோகை
தோசை
தோத்திரம்

ந

நட்சத்திரம்
நமன்
நல்லுலாசன்
நவமாய்
நவமாரன்

நற்கயிறு
நன்னயம்
நாயகர்
நித்திரை
நிமித்தம்ந
நிமிஷம்
நிருபரை
நிஷ்டூரம்
நீதி
நீலன்
நெய்
நெல்லிக்கனி
நெறி
நேமம்

ப

பகதத்தன்
பகாசூரன்
பங்கம்
பச்சரிசி
பஞ்சபாண்டவர்
பஞ்சாங்கம்
பட்சிசாஸ்திரம்
பதினெண்புராணம்
பம்பை
பரவை
பரிபாலனம்
பருப்பு
பலபத்திரராமர்
பவுத்திரம்
பற்பலர்
பாகன்
பாதை
பாகுமொழி
பாஞ்சாலி
பாண்டியன்
பாணிக்கிரகணம்
பாதம்
பார்த்திபன்
பாவை
பிடாரி
பிதா
பிரட்டு
பிரமக்கியானா
பிராமணன்
புகழும்
புண்ணியம்
புராணம்
புலி

புவனி
பூசுரா
பூணூல்
பூவை
பூனை
பொக்கிஷம்
பொற்குடம்
போற்றி

**ம**

மகததேசாதிபதி
மகுடவர்த்தனன்
மங்களம்
மண்டலிகர்
மணிமுரசு
மணிமகுடம்
மதயானை
மதிமுகம்
மந்திரகிரி
மந்திரி
மயில்
மரகதம்
மருமகன்
மலர்ப்பதம்
மலர்மகள்
மன்றல்
மனுநீதி
மாணிக்கம்
மாது
மாதுமை
மாந்துளிர்
மாரன்
மாலை
மேதினி
மேகு
முப்பத்து முக்கோடி
மும்மலம்
மும்மூர்த்திகள்
முழை
முனிவர்
மைந்தர்கள்

**ய**

யானை

**ர**

ரத்தினகவசம்
ராச்சியம்
ராசி
ராத்திரி

ராமச்சக்கரம்
ரொக்கம்

**வ**

வசுதேவர்
வஞ்சனை
வடவை
வறுமை
வள்ளி
வளைத்து
வனங்கள்
விக்கினங்கள்
விகிதப்பிராமணர்
விங்களம்
விசையன்
விடை
விண்ணப்பம்
விண்ணவர்
விதனம்
விநாயகர்
விபவம்
விபூதி
வியாசர்
விரதம்
வில்
வீமன்
வெண்கமலம்
வெற்புலி
வெற்றி
வெற்றிமாலை
வேத்திரகீயம்
வேதநூல்
வேதன்
வேதியர்
வேந்தர்
வேல்விழி
வேலை

**க்ஷ**

க்ஷணம்

**உசாத்துணை நூல்கள்**

1. பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகம், கா. சிவத்தம்பி.
2. தமிழ் நாடகம் நேற்று இன்று நாளை, மு. இராமசுவாமி.
3. தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும், ஏ.என். பெருமாள்.
4. தமிழில் அரங்க ஆட்டம், அஸ்வகோஷ்.
5. கழகத் தமிழ் அகராதி